பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை (22.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 207

# இலங்கையில் இராணுவத்தீர்வு ஒருபோதும் சாத்தியமில்லை

## மஹிந்தவிடம் இந்திய உயர்குழு இடித்துரைப்பு

கொழும்பு, ஜூன் 22

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எதுவும் சாத்தியம் இல்லை. இவ்விவகாரத்திற்கு அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் மட்டுமே முடிவுகட்ட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.**

**இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய உயர்மட்டக்குழு இடித்துரைத்திருப்பதாக அறியவந்துள்ளது.**

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த இந்த அதி உயர் அதிகாரிகள் மூவரைக் கொண்ட குழு நேற்று காலை 9.30 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசியது.

விடுதலைப்புலிகளை இராணுவரீதியாக ஒடுக்கும் கட்டத்துக்கு தமது படைகள் வந்துவிட்டதாக ஜனாதிபதி உயர்மட்டக்குழுவிடம் உற்சாகத்துடன் பிரஸ்தாபித்தாராம். அப்போதே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும்; இராணுவத் தீர்வு சாத்தியம் இல்லை என்று இந்திய உயர்மட்டக் குழு எடுத்துக் கூறியதாகவும் சொல்லப்படுகிறது.

விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கு அல்லது ஒழிப்பதற்கு இலங்கை அரசு வியூகங்களை வகுப்பதற்கு முன்னர் அதற்கு மாற்றீடாக அரசியல் தீர்வு எது என்பதனை முடிவுசெய்து அதுகுறித்து முன்னோக்கிச் செல்வது அவசியம் என்றும் உயர்குழு ஜனாதிபதி மஹிந்தவை அறிவுறுத்தியதாக சொல்லப்படுகின்றது.

இதேவேளை -

தம்மைச் சந்தித்த தமிழ் அரசியல் தலைவர்களிடம், அவர்கள் ஒவ்வொரு கன்னையாகப் பிரிந்து செயற்படமால் ஒரே சக்தியாக நின்று ஜனநாயக வழியில் இனப்பிரச்சினையை தீர்க்க மனங்கொள்ள வேண்டும்

(16 ஆம் பககம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் மீண்டும் முன்னர் நடைமுறையில் இருந்தமை போன்று இரவு 9மணி முதல் அதிகாலை 4.30மணி வரை அமுல்படுத்தப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது.

நேற்றிரவு தொடக்கம் இந்த ஒழுங்குநடைமுறைக்கு வந்துள்ளது என்று பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ-02)

## மன்னாரில் இருந்து மக்கள் கிளிநொச்சிக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

மன்னார் வடக்கில் இருந்து சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்துள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றுள்ள நாலாயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தேவையான சமைத்த உணவுகளை மீள்குடியேற்ற அமைச்சு வழங்கியுள்ளது.

இவர்களுக்குரிய அத்தியாவசிய தேவைகள் முடிந்த அளவில் நிறைவேற்றப்படும் என்று மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (அ-02)

## இந்திய மீனவர்கள் மீது கச்சதீவில் நேற்று சூடு

கொழும்பு, ஜூன் 22

கச்சதீவு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு இந்திய மீனவர்கள் நேற்று சனிக்கிழமை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

தங்கள் மீது இலங்கை கடற்படையினரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று இந்திய மீனவர்கள் தரப்பில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் மீதான கொடுமைகளை தடுப்பதில் இந்தியா பாராமுகம்!

### உயர்மட்டக் குழுவிடம் சம்பந்தன் கவலை

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் ஆள்கள் காணாமற்போதல், கொலைகள், கைதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இக்கொடுமைகளை தடுத்து நிறுத்த இந்தியா முயற்சிக்கவும் இல்லை. பாராமுகமாகவே இருக்கின்றது. தமிழ் மக்களின் துன்பங்களுக்கு பரிகாரம் காண்பதற்கு மனப்பூர்வமாக முயற்சி எதனையும் செய்யாது இந்தியா ஒதுங்கி நிற்கிறது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

கொழும்புக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய உயர் மட்டக் குழுவினருடன் நேற்றுக்காலை இடம் பெற்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 6 கி.கிராம் குண்டு கொழும்பில் மீட்பு

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்குக்கு அருகில் உள்ள கால்வாயில் இருந்து 6கிலோ கிராம் நிறையுடைய கிளைமோர்க் குண்டு ஒன்றை பொலிஸார் கண்டு பிடித்து செயலிழக்கச் செய்துள்ளனர்.

இதேவேளை - கண்டி, கட்டுகஸ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் இருந்து காங்கேசனுக்கு நேரடியாக ஜெனரேட்டர்கள் வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 22

சுன்னாகத்தில் சீன நிறுவனம் ஒன்று அமைத்து வரும் மின்நிலையத்துக்குத் தேவையான ஆறு மின்பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்) அடுத்த வாரம் எடுத்து வரப்படும்.

சீனாவில் இருந்து கப்பல் மூலம் மின்பிறப்பாக்கிகளை நேரடியாகக் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

மின்பிறப்பாக்கிகள் ஒவ்வொன்றும் 6மெகா வாட்ஸ் வலுவுள்ளவை. இவற்றின் மூலம் 36மெகாவாட்ஸ் மின்சாரத்தைப் பெறமுடியும்.

சுன்னாகத்தில் அமைக்கப்படும் மின்நிலையத்தின் முதற்கட்ட வேலைகள் பூர்த்தி ஆகிவிட்டன. ஜெனரேட்டர்கள் வந்து சேர்ந்ததும் அவை ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுவப்படும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவருக்கான பயிற்சி விரிவுரைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன்22

யாழ். மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கான வைத்தியசாலை பயிற்சி விரிவுரைகள் கடந்த ஒரு வாரமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாணவர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாண்டில் கல்வி பயிலும் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கற்கை நெறியை பூர்த்தி செய்வதற்காக வைத்திய சாலை பயிற்சி விரிவுரைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு பயிற்சி விரிவுரை வழங்க வேண்டிய வைத்திய நிபுணர்கள் பயிற்சி அளிப்பதை நிறுத்தியுள்ளனர். அதன் காரணமாக அவர்கள் தமது இறுதியாண்டு பயிற்சி விரிவுரைகளை தொடரமுடியாத நிலையிலுள்ளதாக பெற்றோரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கற்கைநெறி முடிவடைந்து மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறிய பின்னர் யாழ்ப்பாணத்திலே பணியாற்ற வேண்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர், மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அவசர வேண்டுகோள்

### கிளிநொச்சி அரச வைத்தியசாலை மருத்துவர்கள் அறிக்கை

வவுனியா, ஜூன், 22

கிளிநொச்சி வைத்தியசாலையின் தண்ணீர், மின்சாரம் உட்பட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தருமாறு அந்த வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கை ஒன்றினை அவர்கள் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

''எமது நகர்வுகள் வைத்தியசாலை எல்லைக்குள்ளே முடக்கப்பட்டுள்ளன. உணவுக்காகவோ வேறு தேவைகளுக்காகவோ வெளியே செல்ல முடியாத அச்ச நிலை நிலவுகிறது'' என்றும் அந்த அறிக்கையில் மருத்துவ அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

''வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகம் என்பன சீரான முறையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் - அந்த அறிக்கையில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

''மருத்துவ நிலையியல் சட்டங்களுக்கு அமைவாக தரமான சேவையை நோயாளர்களுக்கு வழங்கும் பொருட்டு வைத்தியசாலையில் எழுந்துள்ள இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு பணிவுடன் கோருகிறோம்.

''பிரசவ அறைகளையும், சத்திரசிகிச்சைக் கூடங்களையும் மின்சாரமும் தண்ணீரும் இன்றி நாம் பராமரிப்பது எப்படி? அப்பாவி நோயாளிகள் மலசலகூடம் உட்பட தமது அடிப்படைத் தேவைகளை தண்ணீரின்றி நிறைவேற்றுவது எவ்வாறு? அவசர சிகிச்சைப் பிரிவிலும், அதி தீவிர கண்கா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று விமானத் தாக்குதல்

மன்னார், ஜூன் 22

மன்னார் ஆண்டான் குளம் பகுதியில் விமானப் படையினர் நேற்றுப் பகல் 12.30 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆண்டான்குளம் பகுதியில் விடுதலைப்புலிகள் ஒன்றுகூடும் இடம் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து விமானப்படையினர் தாக்குதல் நடத்தியதாக விமானப் படை பேச்சாளர் விங்கொமாண்டர் ஜனக நாணயக்கார குறிப்பிட்டார்.

இத் தாக்குதலுக்கு எம்.ஐ-24 ரக போர் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

குறிப்பிட்ட அப் பகுதியில் படை நடவடிக்கையை மேற்கொண்டுள்ள இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடன் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லாசறஸ் பிலோமினம்மா



குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லாசறஸ் பிலோமினம்மா 20.06.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் - ஆனாயிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மடுத்தீன் - அக்கினேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மடுத்தீன் லாசறஸ் (இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், யோண் சென் ஜோர்ஜ் ஜீவா (ஜேர்மனி), யஸ்ரின் அன்ரனிற்ரோ (ஆசிரியர், யா/புனித மரியாள் வித்தியாலயம் O.L.R), ஜெரால்டின், வெனிசியா (கனடா), புளோரன் சியாராணி (ஜேர்மனி), ரெலறன்சியா (அழகு), டெனிசியா (ஜேர்மனி), சிபிலாலூசியா (கொழும்பு), ஜெயமங்கள ஜெருட் (றேஷானி, ஆசிரியை யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயசீலி (ஜேர்மனி), அன்ரனிற்றா (ஆசிரியை, யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), அன்ரனி (றீற்ரர்), இம்மானுவேல் (கனடா), ஜெயசீலன் (ஜேர்மனி), இராஜசூரி பீற்றர் தோமஸ்பிள்ளை (ஜேர்மனி), சூசையப்பு (கொழும்பு), அஞ்சலோ (சிலிங்கோ கிராமின் கிரடிட் கம்பனி லிமிட்டெட்) ஆகியோரின் அன்பு மாமியும், யோசேப்பின், சின்னக்கிளி, வவா, காலஞ்சென்றவர்களான மேயம்மா, யேசுரட்ணம், செல்லக்குமார், இராசகுமார், திருக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்ரீனம்மா, அருட்சகோதரியூட் மடுத்தீன், தேவராஜேஸ்வரி, காலஞ்சென்ற யோண்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெசிந்தா, ஜெரோமி, அனோஜியஸ், அனோஜா, மொறின், சாளினி, யோண், மொறிஸ், சேரன், சேத், ரெபேக்கா, கியூரியஸ், கிளின்ரன், மேரி கிஷாந்தி, கிஷாந், சோபியா, அனெக்கா, அன்ஸிகா, காலஞ்சென்ற ஸ்ரானிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருட்திரு அன்ரனிதாசன், அருட்சகோதரி பிறிசில்லா ஆகியோரின் சிறியதாயும், அருட்திரு பிலேந்திரன், அருட்திரு வென்சஸ்லாஸ், அருட்திரு கனிசியஸ், அருட்சகோதரி மேரியூடிற்றா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.06.2008) திங்கள் அன்று பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 16A, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நன்னித்தம்பி இராசரத்தினம்

(அகில இலங்கை சமாதான நீதிவான்)



மலேசியா, கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், கொத்தியாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி இராசரத்தினம் (உரிமையாளர், நாகம்ஸ் சினிமா, நாகம்ஸ் பாட்டா, நாகம்ஸ் பான்சி, சிவாஸ் ஸ்ரோர்ஸ், யாழ் பெயின்காடின்- யாழ். - சுன்னாகம், நாகம்ஸ் மதுபானசாலை, விஷ்ணு விகார்- தெஹிவளை) நேற்று (21.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், கனகரத்தினம்(மலேசியா), கனகபூசணம், அரசரட்ணம் (நாகம்ஸ் பாட்டா) ஆகியோரின் சகோதரனும், ரதனி, ராஜ்குமார்(நாகம்ஸ் m.p), சதீஸ்குமார்(சுவிஸ்), ரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரன் (யாழ் பெயின் காடின்), சிவகுமார்(ஸ்ரீ ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), மதிவதனி ஆகியோரின் மாமனாரும், சந்துஜன், டினிசா, சிவானுஜன், சிவராஜி, சுஜிவா, வேனுகா, சுஜீபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி க்கிரியைகள் நாளை(23.06.2008) திங்கட்கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
இ.ராஜ்குமார் (மகன்)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஜூன் 22

யாழ். மாவட்ட பிரதேசசெயலர்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.


## சிறுநீரகம் தேவை

0+ இரத்த வகை உடைய ஒருவருக்கு 0+ இரத்தவகை கொண்ட சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
ம.தேவசகாயம்,
ஊரியவத்தை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
T.P: 077 6964710

## O/L - படிவம் விற்பனையாகிறது!

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான
O/L - 2008 விண்ணப்பப் படிவங்களை
பின்வரும் விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1) பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
2) நாயகபாலன் - மானிப்பாய்
3) சிவாஸ் - பண்டத்தரிப்பு
4) வீம் (ஐயர் கடை) சுழிபுரம்
5) நியூஸ் பேப்பர் ஏஜன்ட் - இணுவில்
6) விநாயகர் - தாவடிச்சந்தி
7) பாக்கியா - கொக்குவில்
8) யூனிவேர்சல் பான்சி பரமேஸ்வராச்சந்தி
9) கஜன் குறூப் - திருநெல்வேலி
10) சன் நெற் - கல்வியங்காடு
11) ஐங்கரன் மல்ரி றேடர்ஸ் - நல்லூர்
12) ஸ்ரீகாந்த் புத்தகசாலை - நல்லூர்

## விற்பனைக்கு

Pentium III - Computer விற்பனைக்குண்டு Intel Pentium III 1.13 Ghz Processor, 640 Mb RAM, 80 GB Hard Disk, AGP VGA Card, 5.1 Sound Card, Samsung DVD Writer, View Sonic Monitor 15", Keyboard, Mouse, Creative Speaker.

தொடர்புகளுக்கு : 077 444 7646


## தவறிவிட்டது

சுப்பிரமணியம் சுகிர்தா என்பவரது தே.அ. அட்டை (876712156V), விசேட அ.அ (ஆமி I.C) என்பன 17.06.2008 செவ்வாய்க்கிழமை யாழ். பஸ்நிலையத்துக்கும் பொன்னாலை சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. மேற்படி அடையாள அட்டைகளை கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்துதவவும்.

சுப்பசூஸ்(பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக)
434, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையங்களுக்குத் தேவையான கவுண்டர்[Counter] மேசை மற்றும் விளம்பர போர்ட்டுகள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 770, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். T.p: 0212229288


# மரண அறிவித்தல்

## சின்னவன் வேலன்

கைதடி தெற்கு, தட்டாங்கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் வேலன் நேற்று (21.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் கணவரும் காலஞ்சென்றவர்களான காசி, பொன்னி ஆகியோரின் சகோதரரும் சின்னையா, முருகையா, சரஸ்வதி, நாகம்மா ஆகியோரின் பெரியதந்தையும் செல்லையா, அன்னம் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2008) ஞயிற்றுக்கிழமை மு .ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
திருமதி
சோதீஸ்வரி நாகராஜா
(ஆசிரியை).


## ஹோட்டல் "என்" ஜோய்

Hotel 'N' Joy
10, Brown Road, Kaladdy.

★ சகல விதமான உணவு வகைகள்
★ ஐஸ்கீறிம் வகைகள்
★ கொத்து றொட்டி
★ மற்றும் சைனீஸ் உணவு வகைகள்

என்பவற்றை தரமான, சுகாதாரமான முறையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Note: வாகனத் தரிப்பிட வசதிகளும் உண்டு.

உரிமையாளர்.
Hotel 'N' Joy


## 16ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
25 ★ 03 ★ 1944



மறைவு
06 ★ 06 ★ 2008

### திருமதி ஜீவரத்தினம் ஜெயரூபராணி

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும், புலம்பெயர் நாடுகளிலிருந்து தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 24.06.2008 செவ்வாய்க்கிழமை மு.ப 11மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

114, செங்குந்தா வீதி,
திருநெல்லிவேலி கிழக்கு.

(75632)

அன்புடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



நாகம்ஸ் ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும்
உரிமையாளருமான
ந:இராசரத்தினம் J.P
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(75637)

நாகம்ஸ் பாட்டா
ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்

## சிவசுப்பிரமணியம் ஆனந்ததாசன் (ஆனந்தன்)



அரசடி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டசிவசுப்பிரமணியம் ஆனந்ததாசன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்லத்துரை காலஞ்சென்ற தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசேந்திரமலர் (ஆசிரியர், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா) அவர்களின் அன்புக் கணவரும் தனுஷியனின் அன்புத் தந்தையும் திலகவதியின் அன்புத் தம்பியும் விவேகாணந்தராசாவின் அன்பு மைத்துனரும், வாகீசன், ராகுலன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2008) ஞயிற்றுக்கிழமை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் கல்சிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
வடலியடைப்பு.

(75643)

தகவல்:
[illegible] (மைத்துனர்).


A/L(Maths)இல் 03 பாடங்களில் சித்தியுண்டா?
இந்தியாவில் உயர்கல்வி
2012 MAYஇல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
Be An Engineer in 2012 May
இதோ உங்களுக்கு பொறியியல் அனுமதி

Cousers Offered:
Bachelor of Engineering (BE)
- Civil Engineering - Mechanical Engineering - Electrical & Electronics Engineering
- Electronics & Communication Engineering - Computer science & Engineering
- Information Technology - Fashion Technology
- Post Graduate courses (ME)
- M.B.A(Master of Business Administration) - M.C.A (Master of Computer Applications)

SUNTHARALINGAM SAJIVAN ECE (B.E) A/L 2005 St. Michel's College Batticola
PALANIPPILLAI SENTHILLAPAN IT (B.Tech) A/L 2004 St. John's College Jaffna
KAARUNYAA SIVARATNAM IT (B.Tech) A/L 2007 Chundikuli Girls College Jaffna
SIVAKUMARAN VIDIYABUSHAN IT (B.Tech) A/L 2003 St. John's College Jaffna
KANTHIMATHINATHAN KAMALNATH ECE(B.E) A/L 2006 Bambalapity Hindu College, Colombo

இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட All India Council For Technical Education (AICTE)இனால் ... SONAவும் ஒன்று

ELEGIBILITY A/L 3 PASSES (Maths Stream)

Missed the E-faculty! Leave the worries! SONA-A perfect place, more than your expectation!
Tuition Fee - INR1.2 lakh/yr
0.2 lakh Scholarship for > 3C pass

SPOT ADMISSION GIVEN

For more information & Spot admission;-
Mr.T.Elankeethan(Jaf) Tel - 0212228374 Mobile - 0775936343
Mr.S.Jeyakanth(Col) Mobile - 0773867257
v4educationalconsultancy@gmail.com

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamil Nadu
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

The Express Institute Irupalai, Kopay Tel:0212225840


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்து அகன்ற சிந்தனையும் செந்தண்மையும் சீரிய செயற்பாடும் ஒருங்கே வடிவெடுத்த அன்னை

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒரு நாள் இறந்தே தீருவர் என்ற உண்மையை நன்கு அறிந்திருந்தும் -

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண் டார் வருவரோ மாநிலத் தீர்?...'' என ஔவைப் பிராட்டி எழுப் பிய கேள்வியின் அர்த்தத்தை அனுபவ ரீதியாக உணர்ந்திருந்தும்-

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி காலமாகி விட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் -

உற்றார் அழுதனர்; உறவினர் அழுதனர்; கற்றோர் அழுதனர்; மற்றோரும் அழுதனர் -

வீடு அழுதது; நாடு அழுதது; ஊர் அழுதது; உலகமே அழுதது!

தெல்லிப்பழையில் அன்னையின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளிலும், துர்க்காபுரம் யாத்திரிகர் மண்டபத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்ச்சியிலும்

னவர் அவர். பெரும்பாலானவர்களைப் போல் ''நான் உண்டு; என் பாடசாலை உண்டு; என் தொழில் உண்டு'' எனத் தன் பணியை அவர் மட்டுப்படுத்தி இருந்திருந்தால் அவருடைய மரணமும் ''பத்தோடு பதி னொன்று அத்தோடு இதுவொன்று'' எனக் கணிக்கப்பட்டிருக்கும்; மறக்கப்பட்டிருக்கும்!

ஆனால் -

அவர் சாதாரணர் அல்லர்; சாதனைகள் பல படைத்த அசாதாரணர்!

ஆற்றல் மிக்க ஆசிரியராகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்டே ஆன்மீக சொற்பொழிவாளராகவும் தன் பணியை விரிவாக்கினார். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, மலைநாடு முதலிய இடங்களிலுள்ள பெரிய-சிறிய கோயில்களில்-பாடசாலைகளில் அவருடைய ஆன்மீக, தமிழ்க் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

அருட்கடாட்சத்துக்கு அடியவர்களை ஆளாக்கினார்.

கண்டிப்பான நிர்வாகியாகவும் கருணை மிகுந்த தலைவியாகவும் விளங்கிய அவரைத் தேடிப் பணம் வரத் தொடங்கியது; வந்து குவியத் தொடங்கியது.

''நீ உழைக்கும் பணத்துக்கும் உன்னைத் தேடி வரும் பணத்துக்கும் நீ உரிமை கொண்டாட முடியாது; ஏனெனில் நீ அதன் தர்மகர்த்தாவே தவிர, அதன் உரிமையாளி அல்ல'' என்ற காந்தியடிகளின் வார்த்தைகளை வழிகாட்டியாகக் கொண்டார்.

அநாதைச் சிறுவர்களுக்கு அழகான இல்லம் அமைத்தார். ஆதரவற்ற முதியோருக்கு- உதவியற்ற பெண்களுக்குத் தனித்தனி இல்லங்கள் அமைத்தார்.

'பாத்திரம் அறிந்து பிச்சை இடு' என்பதற்கு இணங்க, தேவையும் தரமும் தகுதியும் அறிந்து பாடசாலைகளுக்கு, மருத்துவ நிலை



கப்பட முடியாதது; மறக்கப்பட முடியாதது. எல்லோரும் இன்புற்றிருக்க *நினைப்*

## அறப்பணிகளைத் தொடர்வோம்; அவரை நினைவு கூர்வோம்

சொல்லொணாச் சோகத்துடன் எண்ணிலா மக்கள் கலந்துகொண்டனர்; கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

தனி ஒருவரின் - யாழ்ப்பாணத் தமிழ் மகள் ஒருவரின்- இறுதி நிகழ்ச்சியில் இத்துணைப் பெருந்தொகையினர் இதய பூர்வமாகக் கலந்துகொண்டமை சமீப கால யாழ்ப்பாண வரலாற்றில் வேறு எவர் சம்பந்தமாகவும் நடைபெறாத நிகழ்ச்சி என்பது பலருடைய நினைவகலாப் பதிவேடு தரும் மதிப்பீடு!

காரணம் என்ன?

யாழ்ப்பாணத்துச் சாதாரண தமிழ்க் குடும்பத்திலே பிறந்து, படித்து, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகி- தமிழ் பண்டிதரா

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து முதலிய இடங்களில் வாழும் சைவத் தமிழ் அன்பர்களும் அவருடைய அரிய சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரும் பயன் அடைந்தனர்.

சாதாரண மக்களுக்கு ஆத்மீக நாட்டத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். ஓலைக்கொட்டிலில் ஒதுங்கியிருந்த கொற்றவையை கோபுரத்துடன் கூடிய கோயிலிலே கொலுவிருக்கச் செய்தார். அந்தணப் பெருமக்களைக் கொண்டு ஆகம விதிப்படி நித்திய, நைமித்தியங்களை ஆற்றுவித்து, அன்னையின்

யங்களுக்கு, பொதுப்பணி மன்றங்களுக்கு, பணமும் பொருளும் கொடுத்து உதவினார்.

பலதரப்பட்ட மனித நேயப் பணிகளுக்கு வரையாது வழங்கும் சைவ ஆலயம் எனத் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம் போற்றிப் புகழப்படுவதற்கு அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆழ்ந்து அகன்ற சிந்தனையும் செந்தண்மையும் சீரிய செயற்பாடுமே சிறப்பான காரணங்கள் என்பது உண்மை- வெறும் புகழ்ச்சி இல்லை.

தனிப்பட்டவர்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் நடுவு நிலைமையில் நின்று நல்லதை செய்த ஒரு தலைவியின் மறைவு, ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பது மறுக்

*பதுவே* அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே - என்றார் தாயுமானவர்.

எல்லோரும் இன்புற்றிருக்க *செய்வதுவே* அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே -எனச் செயற்பட்டவர் தங்கம்மா அப்பாக்குட்டி

**சிற்பி**

மனதிலே மாசின்றி, மற்றவர்களின் மேம்பாட்டுக்காக உழைத்த ஒரு மாபெரும சமயத் - சமூகத்- தலைவியின் மறைவுக்காக வருந்துவதுடன் அமையாமல், அவருடைய அறப்பணிகளை அதிகளவு வீச்சுடனும் வேகத்துடனும் தொடர்வதே அவருக்குரிய மிகச் சிறந்த நினைவுச் சின்னமாகத் திகழும். *

# தெற்கு அரசியலில் மீண்டும் சந்திரிகா; அதிர்வெடிகள் எந்நேரமும் கேட்கலாம்!

சந்திரிகா குமாரதுங்க - முன்னாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் அக் கட்சியின் சார்பில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவரும் - இப்பொழுது அக் கட்சியின் போசகராக மட்டும் இருந்து வருகிறார்.

கடந்த வாரம் சந்திரிகா குமாரதுங்கஎதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவோடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில்



இருந்து விலகி அக் கட்சியின் மக்கள் பிரிவு என்ற அமைப்பை உருவாக்கியவரான மங்களசமரவீரவுடனும் ஒரே மேடையில் தோன்றி உரை நிகழ்த்தி உள்ளதுடன் ஜனா திபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தைத் தயவு தாட்சண்யமின்றித் தாக்கியும் விமர்சித் தும் உள்ளார்.

சந்திரிகாவின் இந்தப் போக்கினை ராஜபக்ச அரசின் மூத்த உறுப்பினர்கள் பலரும் விரும்பவில்லை. எதிர்க்கட்சித் தலைவருடன் சேர்ந்துகொண்டு அரசை விமர்சிக்கும் அவரைத் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் போசகராக இருக்க அனுமதிக்கலாமா என்று அவர்களில் சிலர் கேள்வி எழுப்பியுள்ளார் கள். அந்தப் பதவியில் இருந்து அவரைத் தூக்கிவிடுவதற்கான ஆலோசனையும் நடை பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த மாதம் இடம்பெற்ற அக் கட்சியின் பேச்சாளர்கள் கூட்டமொன்றில் சந்திரிகா அம்மையார் எதிர்பாராத விதத்தில் கலந்துகொண்டு கலகலப்பை ஏற்படுத்தியிருந்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது.

கடந்த வாரம் ஒரே மேடையில் தோன்றிய பிரமுகர்களும் கூட ஒரு காலத்தில் எதிரும் புதிருமாக இருந்தவர்கள்தான். மங்கள சமரவீரவும் சந்திரிகாவும் அப்பொழுது ஒரே முகாமில் இருந்தவர்கள். 2004 ஆம் ஆண்டு விக்கிரமசிங்கவின் கூட்டு அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தவர்களும் அவர்களே.

கிராம மட்டத்தில் அபரிமித ஆதரவு இருந்தபோதிலும் இன்று ஒரே மேடையில் தோன்றி அரசாங்கத்தை விமர்சிப்பதற்குத் துணிந்திருப்பது அரச தரப்பில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கும் அதே வேளை அரசுக்கு எதிரான பலமான ஓர் கூட்டு எதிர் அமைப்பு விரைவில் உருவாகக் கூடிய சாத்தியத்தை எடுத்துக் காட்டுவதாக வும் கருதப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனராகிய எஸ்.டபிள்யூ.ஆர் பண்டார நாயக்காவினதும் அவருக்குப் பின் அக்கட்சியின் தலைவியாகவும் சக்திமிக்கப் பிரதமராகவும் இருந்து சிறிமாவோ பண்டாரநாயக்கவினதும் குமாரத்தி என்ற முறையில் சந்திரிகா குமாரதுங்கவுக்கு அக் கட்சியில் இன்றும் உயர் மட்டத்தில் இல்லாது போனாலும் அடி மட்ட உறுப்பினர்கள் மத்தியிலும் கிராமிய மட்டத்திலும் ஆதரவும் ஒத்துழைப்பும் அபரி மிதமாகவே இருக்கும் என்று எதிர்பார்க் கலாம். எனவே அவர் மீது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய உயர் மட்டத் தலைவர்கள் அவசரப்பட்டு எதுவித நட வடிக்கையிலும் இறங்கி விடமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. அதிலும் சப்பிரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவிருக்கும் காலகட்டத் தில் அடிமட்ட உறுப்பினர்களின் வாக்காளர் களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளும் நட வடிக்கை எதிலும் அவர்கள் இறங்குவதாயின் மிக நிதானித்தே செய்வார்கள்.

என்றாலும் சந்திரிகா அம்மையார் மங்

தாரத்தில் மகத்தான வளர்ச்சி கண்டிருந்தது. நல் லாட்சியின் அடிப்படை அம்சங்களை நான் உறுதிப்படுத்தியிருந்தேன். எல்லாச் சமயங் களிலும் மக்களின் மேலாதிக்கம் பாதுகாக் கப்பட்டு வந்தது. இலங்கையின் அடையா ளத்தை மீளக் கட்டியமைப்பதற்காகவே கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சிங்களத்தை அரச கரும மொழியாக்கினார்.

சிறுபான்மையோருக்கு அதிகாரத்தைப் பகிர்வதற்காக 1994 ஆம் ஆண்டு முன் வைக் கப்பட்ட முன்மொழிவுகளைவிட அவர் செல்வநாயகத்திடம் செய்துகொண்ட ஒப் பந்தம் மேலானது.

துரதிஷ்டவசமாக இரண்டு ஒப்பந்தங்

**தொகுப்பு: ராம்**

களும் சதிகாரத் தீவிரவாதக் கும்பல்களால் நிர் மூலமாக்கப்பட்டுவிட்டன. தீவிரவாதிகள் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இருக்கிறார்கள்.

வடக்கில் உள்ள மக்களுக்கு நீதியான ஏற்றுக்கொள்ளக்கூடியதான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படுமானால் பயங்கரவாதத்தை அவர்கள் மறுதலிப்பார்கள்.

தெற்கில் உள்ள தீவிரவாதத்துக்கு 5 வீதம் கூட மக்களின் ஆதரவு இருக்கமாட்டாது. சிங்கள பௌத்தர்கள் தான் நாட்டை

மேலும் தெரிவித்துள்ளார்.

**ஜூலை மாதம் சோதனையான காலம்**

மங்கள சமரவீரவின் கட்சி மாநாட்டில் சந்திரிகா கலந்துகொண்டு பேசியிருப்பதன் எதிரொலி அடுத்துவரும் நாள்களில் அதிரடியாக வெளிப்படக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். ஜூலை மாதம் அரசுக்குப் பெரும் சோதனை மிக்க மாதமாக இருக்கப்போகிறது என்று கருதப்படுகின்றது.



எரிபொருள் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் ஊடகவியலாளர் கள் உரிமைகள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை முன்வைத்து எதிர்க் கட் சிகள் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு அறிவித்தல்களை விடுத்துள்ளன.

பல தடவைகளிலும் அரசுக்கு மிண்டு கொடுக்கும் நிலைப்பாட்டைப் பேணி வந்த ஜே.வி.பி. தற்போது தன் போக்கை மாற்றிக்கொண்டு விட்டதாகத் தெரிகின்றது.

அந்தக் கட்சியில் இருந்து பிரிந்து விட்ட வீரவன்சவும் தோழர்களும் அரசுடன் இணைந்து செயற்படவிருந்தாலும் -

## ஜூலை மாதம் அரசுக்குச் சோதனை மிகுந்த காலமாகலாம்

கள சமரவீராவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு மாநாட்டில் பேசியுள்ளதை ஆட்சியில் உள்ள கட்சியினரை ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

**சந்திரிகா கூறியவை**

சந்திரிகா கூறியுள்ளவற்றில் சில கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன:

இன்று ஜனநாயகம் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதற்குத் தற்போதைய நிர்வாகமே நேரடியாகப் பொறுப்பு. நிலைமையைச் சமாளிக்க அரசு உடனடியாக நட வடிக்கை எடுத்தாகவேண்டும். நாடு எனது ஆட்சிக் [illegible]

ஆழ வேண்டும் ஏனையவர்கள் அடிமைகள் போல் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டை பெரும்பான்மையான சிங்கள மக்களும் ஆதரிக்கவில்லை என்று சந்திரிகா கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மிதவாதமான கொள்கை ஒன்றைக் கடைப் பிடிக்க வேண்டும். காடைத்தனமும், ஊழலும் கட்சியில் இருந்து ஒழித்துக் கட்டப்படவேண்டும். கட்சியில் மக்கள் கருத்துகளுக்கு இடம் அளிக்கப்படவேண்டும். அதிகாரத்தில் மூழ்கிப் போய் விவாதங்களுக்கு இடம் தராமல் போகும் போக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கலாகாது என்று அவர்

அதை அரசும் அரவணைக்கும் நிலையில் இருப் பதாலும் ஜே.வி.பியின் கோபத்துக்கு உள் ளாகி உள்ளது மகிந்த அரசு.

இரண்டு மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்தவிருக்கும் அரசு அவைகளில் வெற்றி பெறுவதற்குக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

புலிகளுடனான உடனான யுத்தம் ஒரு பக்கம், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புப் போராட்டம் இன்னொரு பக்கம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச அழுத்தம் மற்றொரு பக்கம் எனப் [illegible] முனை நெருக்குதல்களை அரசு எதிர் நோக்கும் நிலையில் உள்ளது. *

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Dr. பஸ்லூர் ரஹ்மான்
(M.B.B.S, MD, Pcu, M.V.)
அவர்களின்
## மருத்துவ நிகழ்ச்சி

தமிழன் தொலைக்காட்சியில் இதுவரை ஞாயிறு தோறும் இரவு 11.00 மணிக்கு நடைபெற்ற Dr. பஸ்லூர் ரஹ்மான் அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி தற்போது வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. இனிவரும் வெள்ளிக்கிழமைகளில் பல முக்கியமான ஆதாரபூர்வமாக (தடுப்பூசி உட்பட) பல தகவல்களை, விரிவுரைகளை நிகழ்த்த இருக்கிறார். உங்களின் சந்தேகங்களை பின்வரும் தொலைபேசி எண், முகவரியினூடு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

தொலைபேசி: 00919840472736
00919840498898
முகவரி: Dr. பஸ்லூர் ரஹ்மான்
No.: 17, கஸ்ரியன் பீச் றோட்,
சாந்தோம்,
சென்னை 600004, இந்தியா. (சி/553439)


# யாழ்.சந்திரசேகரம் வீதியில் சுகாதாரச்சீர்கேடு

நல்லூர், ஜூன் 21

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியையும் முனீஸ்வரன் வீதியையும் இணைக்கும் சந்திரசேகரம் வீதி மிகவும் மோசமான சுகாதாரப் பாதிப்புக்குள்ளாகிக் காணப்படுகிறது.

இந்த வீதியில் பெருமளவு கழிவுப் பொருள்கள், குப்பைகள் தேங்கிக் கிடப்பதாலும் பூனை, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளது இறந்த உடல்கள் போடப்படுவதாலும் அப்பகுதியில் ஈக்கள் அதிகரித்துள்ளன.

இப்பகுதிகளை அண்டிய உணவு நிலையங்களிலும் ஏனைய வர்த்தக நிறுவனங்களிலும் ஈக்களின் முற்றுகை பலமாக இருப்பதனால் தொற்று நோய்களும் பரவும் ஆபத்து இருக்கின்றது. மாநகர சுகாதாரப் பகுதியினர் இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோருகின்றனர். (202-111)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்22

உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலய மணவாளக் கோல விழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேடபூசை, நவசக்தி அர்ச்னை என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்22

நாவற்குழி தச்சன்தோப்பு அரசடி பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு புதிய சித்திரர் தேர் அமைக்கப்பட்டுள்ளது.

சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.25 மணிக்கு இடம் பெறும்.

வெள்ளோட்டத்தின் பின்னர் சிற்பாசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (203-207)

## கணிதபாட மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜூலை22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான கணிதபாட மதிப்பீடு- இல.7 பகுதி II இன் ஏ,பி. ஆகியவை நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)


என்றும் மாறாத இள்மையின் இரகசியம்
பயோட்டின். விட்டமின் E. கல்சியம்
பென்டோதனேட் அடங்கியது
DISTRIBUTOR FOR JAFFNA: ABILA MARKETING SERVICES TEL: 021 222 2490, MOBILE: 0777795611
பலம் வாய்ந்த ஆரோக்கியமான நகங்களுக்கும்
கவர்ச்சி மிக்க சருமத்திற்கும் பிரகாசமான பற்களுக்கும்
ஆரோக்கியமான கேசத்தின் வளர்ச்சிக்கும்
எலும்புகளை வலிமைப் படுத்தவும்




## கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும் பண்பாடும்
தழைத்தோங்க அருந் தொண்டாற்றிய
சைவப் பேரறிஞர்
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தினை தெரிவிப்பதோடு
அன்னார், இறவாத இன்ப அன்பு
வேண்டி இறைபதம்பெற அம்பிகையினை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிர்வாகிகள்,**
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம். (சி/553444)

## கண்ணீர்ப் பூக்கள்



**செல்வராசா சற்குருநாதன்**
(உப அதிபர், யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை)
19.06.2008 அன்று ஆறாத்துயரில் மூழ்க வைத்து திடீரென எம்மை விட்டுப் பிரிந்த எமது உபஅதிபர் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை.** (சி/553446)

## எட்டாம் ஆண்டு நினைவு நாள்



செல்வன்
**பாலசுப்பிரமணியம் கோபிநாத்**
(விஞ்ஞானப் பிரிவு மாணவன்,
யாழ்.இந்துக் கல்லூரி)
இலங்கையில் மலர்வு 05.12.1980
இந்தியாவில் உதிர்வு 20.06.2000
திதி: சதுர்த்தி (22.06.2008)

சிறுபாவம் செய்தவர்
சிறுவயதில் இறைவனடி சேர்வர்
ஆனால் உம்மை இழக்க நாம்
பெரும்பாவம் செய்துவிட்டோம்
எட்டாண்டு காலமாக உன் காலடி ஓசையை
கேட்டுவரும் எமக்கு உன் காட்சியை
விரைவில் தா ஐயா!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**
தகவல்:
ஐ.பாலசுப்பிரமணியம், வேலணை 04.
தொ.பே.: 0602216799 (75606)

## 42 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**பரமநாதன் மகேந்திரன் (தம்பி)**
(உரிமையாளர் Modern net Communication & Video, Audio Centre)
மலர்வு: 10.08.1972 உதிர்வு: 12.05.2008

தம்பி!
அன்புக்கு அப்பா, அம்மா
ஆசைக்கு நான்கு தங்கைகள் என இருந்தாயே!
இல்லத்தனில் நீயும் நடந்து வருகையில்
எம்மிதயம் எல்லாம் பூரிக்குமே இன்பத்தால்
இனிய நினைவுகளில் இடிவிழுந்தால் போல்
கண்மூடி முழிக்க முன்னர்- நீ
அநியாய அழிப்புக்கு இரையானாயே!
உன் இனிய முகத்தை காணத்
துடிக்கின்றோம் நாமெல்லாம்
நாள்கள் பல ஓடி மறைந்தாலும்
ஆறாதடா எம் நெஞ்சம்.

எமது அன்புச் செல்வம் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து தொலைபேசி மூலமாகவும் நேரில் வந்தும் மலர்வளையங்கள் அனுப்பியும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டும் ஆறுதல் அளித்து பல வழிகளில் உதவிபுரிந்த நண்பர்கள், அன்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் மற்றும் அன்னாரது இறுதி நேர உயிர்ப்போராட்டத்தின் போது உதவி புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் மற்றும் அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் எல்லோருடையதும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'திருப்பதி',
121, புகையிரத நிலையவீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.


தகவல்:
திரு.சி.பரமநாதன்
(தந்தை)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் இந்துக்களின் பண்டைய வரலாற்றின் பெருமைக்குச் சான்று பகர்கிறது மன்னார் மாவட்டம்

இலங்கையில் தமிழர்களின், இந்துக்களின் பண்டைய இருப்பை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தும் சான்றாக மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மைமிகு சிவாலயமான திருக்கேதீஸ்வரம் விளங்குகின்றது.

மாதோட்டத்துறைமுகம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்த முக்கிய வணிகத் துறைமுகமாகக் குறிப்பிடப்படுவதன் மூலம் பண்டைய நாள்களின் இப்பகுதியின் சிறப்பு கோடிட்டுக் காட்டப்படுகின் றது.



நாற்பது வருடங்களுக்கு முன்னர் திருக்கேதீஸ்வரத்தின் தோற்றம்...

துள்ளன. மாதோட்டத் துறைமுகம் இந்திய, இலங்கைப் போக்குவரத்திற்கும், வர்த்தக நடவடிக்கும் உரிய பட்டணமாக விளங்கியுள்ளது. யாழ்ப்பாணத் தமிழரசின் முக்கிய துறைமுகமாக விளங்கிய இந்தத் துறைமுகத்தினூடாக இந்தியாவிலிருந்து யாத்திரிகர்கள் திருக்கேதீஸ்வரத்திற்கு வருகை தந்துள்ளதுடன் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இந்துக்கள் யாத்திரிகை சென்றுள்ளதன் மூலமும் இந்துக்கள் வாழ்ந்த பகுதிகளெங்கும் திருக்கேதீஸ்வரம் பிரசித்தி பெற்றிருந்தது என்பது புலனாகிறது. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தத் தலமாக பாலாவி விளங்குகின்றது.

கி.பி.1560 இல் போர்த்துக்கேயர் மன்னாருக்குள் புகுந்து திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலைச் சிதைத்தழித்து கொள்ளையிட்டதாகவும், கோயிற்கற்களைக் கொண்டு மன்னார் கோட்டையைக் கட்டியதாகவும் வரலாற்றுப் பதிவு கூறுகின்றது. திருக்கேதீஸ்வர வீழ்ச்சியுடன் பலநூறு ஆண்டுகள் அந்நியராட்சிக்குட்படாதிருந்த மன்னார் பிரதேசம் வீழ்ச்சியடைந்தது. அதன் பழம் பெருமைகள் சிதைக்கப்பட்டும், மறைக்கப்பட்டும்

சித்திவிநாயகர் கோயிலும், முனீஸ்வரர் கோயிலும் உள்ளன. அதே போன்று பாலம்பிட்டி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் பண்டாரவன்னியன் காலத்துக் கோயிலாக விளங்குகின்றது.

தலை மன்னார் முத்துமாரியம்மன் ஆலயத்தின் வரலாறு திருக்கேதீஸ்வரத்துடன் தொடர்பு கொண்டதாகவுள்ளது. சிலாவத்துறை அம்மன் கோயிலும், சின்னக்கரிசல் பிள்ளையார் கோயிலும் பழமை வாய்ந்தவை. சிலாவத்துறை அம்மன் கோயில் இன்று சிதைந்த நிலையிலுள்ளது.

வட்டக் கண்டல் சித்தி விநாயகர் கோயில் பழமையின் சின்னங்களிலொன்றாகக் கொள்ளப்படுகின்றது.

தலை மன்னார், மன்னார், நானாட்டான், உப்புக்குளம், திருவாணைக்கூடம், பாலம்பிட்டி,பேசாலை, சின்னக்கரிசல், சிறு நாவற்குளம், முள்ளிப்பள்ளம், எழுந்தூர், ஆலடி, உயிலங்குளம், தாராபுரம், வண்ணாமோட்டை, சின்னப் பண்டி விரிச்சான், பூம்புகார், முள்ளிக்குளம், பெரியபண்டிவிரிச்சான், இரணை இலுப்பைக்குளம், தட்சணாமருதமடு, ஆவரங்குளம், கல்மடு, முருங்கன்,செம்மண்தீவு, கட்டுக்கரை, கட்டையடம்பன், விடத்

## திருக்கேதீஸ்வரத் திருத்தலமும் வணிகப் பிரசித்தம் பெற்றிருந்த மாதோட்டம் துறைமுகமும் உறுதி செய்கின்றன

கி.பி 1650 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் படையெடுத்து வரும்வரை மன்னார் பிரதேசம் சகல வளங்களும் பொருந்தியதாக யாழ்ப்பாணத் தமிழ் அரசின் ஒரு பகுதியாக விளங்கியது என்பது வரலாறு. போர்த்துக்கேயர் ஊடுருவும் வரை இப்பகுதி வேறெந்த இனத்தவரதும் ஆளுகைக்குட்படாத இந்து சமயத்தவரதும், தமிழர்களதும் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் என்பதும் வரலாற்றுப் பதிவாகும்.

கி.மு 5 ஆம் நூற்றாண்டில் விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங்கையில் கரையொதுங்கியதாக மகாவம்சம் கூறுகின்றது. அவர்களில் உபதிஸ்ஸன் என்ற பிராமணனொருவன் இருந்ததாகவும் அவன் அக்காலத்தில் இலங்கையின் நான்கு திசைகளிலுமிருந்த ஐந்து பிரசித்தி பெற்ற சிவாலயங்களைச் சென்று தரிசித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. வடக்கேயுள்ள நகுலேஸ்வரமும், கிழக்கேயுள்ள திருக்கோணேஸ்வரமும், தெற்கேயுள்ள தொண்டீஸ்வரமும், மேற் கேயுள்ள முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பவையே அந்த ஐந்து சிவாலயங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவற்றையே பஞ்சேஸ்வரங்கள் என்கின்றோம். இந்த ஐந்து சிவாலயங்களையும் உபதிஸ்ஸன் சென்று வழிபட்டதாகக் கூறும் மகாவம்சத்தின் கூற்றின் மூலம் இலங்கையின் ஆதிசமயம் இந்து சமயமே என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முதலில் கி.மு 237 ஆம் ஆண்டிலேயே பௌத்த சமயப் போதனை மகிந்ததேரரால் புகுத்தப்பட்டது என்று மகாவம்சம் உறுதிப் படுத்துகின்றது. புத்த துறவிகளால் எழுதப்பட்ட மகாவம் சம் இலங்கையில் புத்த சமயத்திற்கு முற்பட்ட இந்து சமய இருப்பை உறுதிப்படுத்துகின்றது.

### இலங்கையில் இந்து சமயத்தின் பூர்வீகம்

மகாவம்சக் கூற்றின்படி இலங்கையின் பூர்வீகக்குடிகள் இயற்கை வழிபாட்டுடன், நாக வழிபாட்டையும் லிங்க வழிபாட்டையும் கைக்கொண்டதாகக் கூறப்படுவதன் மூலம் இந்து சமயத்தின் பூர்வீகம் புலப்படுத்தப்படுகின்றது.


இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கொள்ளப்படும் இதிகாச காலமான இராமாயண காலத்தில் இலங்கைத்தீவில் இராமபிரான் சென்று வழிபாடு செய்த மூன்று சிவாலயங்களாக திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரமும் அமைந்தன என்பதும் ஒரு இதிகாசகால வரலாற்றுக் குறிப்பாகும்.

மன்னார் மாவட்டத்தின் பழம் பெருமைக்குச் சான்றாக கேதீஸ் வரம் கொள்ளப்படுவதைப் போன்றே மாதோட்டத் துறை முகமும் கொள்ளப்படுகின்றது.

மன்னாரிலுள்ள சிலாவத்துறை அக் காலத்தில் வளம்பொருந்திய இந்துக் கிராமமாக விளங்கியுள்ளது. கடலில் முத்துக் குளித்தலுக்குப் பிரசித்தமாக விளங்கியது இப்பகுதி.

7 ஆம் நூற்றாண்டில் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் மீது ''விருது குன்றமா மேரு'' என்று தொடங்கும் தேவாரத்திருப் பதிகத்தை திருஞானசம்பந்தரும், ''நத்தார் படை ஞானன்'' என்று தொடங்கும் பதிகத்தை சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியுள்ளதன் மூலம் 7 ஆம் நூற்றாண்டில் இத் தலத் தின் பெருமை கடல் கடந்தும் பரவியிருந்தமை வெளிப்படுகின்றது.

புத்தர் பெருமானும், யேசு பெருமானும், நபிபெருமானும் அவதரிக்கு முன்பே சிவபெருமானின் திருக்கோயி



திருக்கேதீஸ்வரத்தில் உள்ள கல்வெட்டுகளில் சில....

லான திருக்கேதீஸ்வரம் மன்னாரில் சிறப்புடன் திகழ்ந்தது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இது இப்பகுதியின் பண்டைய இந்து சமய இருப்பின் சான்றாக அமைகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலை, தட்சண கைலாசமான்மியம் போன்ற நூல்களிலும் திருக்கேதீஸ்வர ஆலயம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

### செல்வாக்குப் பெற்றிருந்த மாதோட்டத் துறைமுகமும் திருக்கேதீஸ்வரமும்

சோழர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டத் துறைமுகமும், திருக்கேதீஸ்வரத் திருத்தலமும் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்


உள்ளன. யாழ்ப்பாணத் தமிழ் அரசின் வீழ்ச்சியுடன் மன்னாரின் மாண்பு மறைக்கப்பட்டுவிட்டது வரலாறாகும்.

பிரபல வரலாற்று ஆய்வாளரும், எழுத்தாளரும் கத்தோலிக்க சமயத்தின் மீது தீவிர பற்றுக் கொண்டவரும், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட வருமான காலஞ்சென்ற சூசைப்பிள்ளை தொம்மானுப்பிள்ளை அவர்கள் அறுபதாம் ஆண்டின் பகுதிகளிலும் எழுபதாம் ஆண்டின் முற்பகுதிகளிலும் இலங்கைத் தமிழர் வரலாறு, மன்னார் மாவட்ட வரலாறு, மாதோட்டம், திருக்கேதீஸ்வரம் என்பவற்றின் பழைமை, பெருமை என்பவற்றை 'தினகரன்' வார மஞ்சரியில் தெளிவாகவும், சான்றுகளுடனும் தொடர் கட்டுரைகளாக எழுதியுள்ளார்.

### யாழ்.பல்கலைக்கழகம் கவனம் செலுத்துமா?

நூலுருப்பெறாதஅவைஇன்றுகொழும்பு ஆவணக்காப்பகத்தில் மட்டுமேயுள்ளன. வரலாற்று ஆய்வாளர்களுக்கும், மாணவர் களுக்கும் அவரின் ஆக்கங்கள் பயனுள்ளவையாக அமையும். இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை கவனம் செலுத்துமானால் அது வரவேற் கத்தக்கதாகும்.

போர்த்துக்கேயர் மன்னாரை ஆக்கிரமிப்பதற்கு முன்னர் அதாவது கி.பி 1650 இருந்த (மன்னா)ர் வையாக இலுப்பைக் கடவை முத்துமாரியம்மன் கோயிலும்,



இப்போது கருங்கல் இராஜகோபுரத்துடன் முகப்புத் தோற்றம்.

தல்தீவு, ஆத்திமோட்டை சீது விநாயகர் குளம் உட்பட பல இடங்களிலும் இந்துக் கோயில்கள் அமைந்துள்ளன. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் மடுப் பகுதியில் அம்மன் கோயிலொன்று பிரசித்தி பெற்று விளங்கியதாகப் பதிவுகளுள்ளன.

இன்று மன்னார் மாவட்டத்தில் இந்துக் கோயில்களுடன், பல கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களும், இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களும் நிறுவப்பட்டு சிறப்புடன் விளங்குகின்றன.

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மன்னார் மாவட்டத்தின் மும்மதத்தினரின் பண்டைய இருப்பை வலியுறுத்தி, உறுதிப்படுத்தும் தகைமைகளை திருக்கேதீஸ்வரமும், மாந்தோட்டமும் கொண்டுள்ளன என்றால் அதுவே உண்மையாகும்.


இலங்கைத்தமிழரின், இந்துக்களின் பண்டைய வரலாற்றுப் பெருமைக்கும், இருப்புக்கும் மன்னாரின் பண்டைய வரலாற்றுச் சான்றுகள் கட்டியம் கூறி நிற்கின்றன என்றால் அதுவே உண்மையாகும்.

***

த.மனோகரன்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## சின்னத்துரை பத்தகுணசீலன்

(விளாக்)

(பூங்கனிச்சோலை ஸ்தாபகரும் ஏக உரிமையாளரும்)

**மண்ணில் மழலையாய் 25.07.1961**

**விண்ணில் தெய்வமாய் 09.05.2008**

அன்புத் தெய்வமே எம்மவரே
என்பும் பிறர்குரியதாய் வாழ்ந்தவரே
இன்சொல் பேசும் வடிவழகே
எம்முன் யாதுமாகி நின்றவரே
நாற்பத்தைந்து நாள்களாகியும்
நேற்றுப் போல் உள்ளது உன்பிரிவு
உற்ற மனையாள் உன் பிஞ்சுகள்
கெஞ்சும் குரல் கேட்கலையா...
எங்கு பார்ப்பினும் உன் உருவம் தெரிகிறதே
உறங்கும்போதும் உன்குரல் கேட்கிறதே
மாசற்ற மன்னவனே பழுதில்லா உன்வாழ்வை
பாதியிலே முடித்தனரே; நீசெய்த புண்ணியங்கள்
உன்னை காக்கவில்லையே ஐயகோ!
என்சொல்ல நாமழ யாரோடு நோவோம்
யார்க்கெடுத்துரைப்போம்...
விண்ணக வாழ்வில் உன் ஆத்மா சாந்திபெற
தெய்வமாய் நீ இருந்து எமைவழி நடத்திட
வேண்டுகின்றோம் ....... இறைவனையே!

09.05.2008 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் சின்னத்துரை பத்தகுணசீலன் (விளாக்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
முடமாவடி.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி இளைஞர்களை இலக்கியத்துறையில் ஈடுபாடு கொள்ள வைத்த முதுபெரும் கூட்டுறவாளர் சிதம்பரப்பிள்ளை

கேள்வி:-நீங்கள் எப்பொழுது தொடக்கம் கட்டைவேலி- நெல்லியடி ப. நோ.கூ.சங்கத் தலைவராகப் பணியாற்றி வருகிறீர்கள்?

பதில்:- ஆரம்பத்தில் எமது கூட்டுறவுச்சங்கம் புனரமைக்கப்பட்டபோது அதிலிருந்து 4 அங்கத்தவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். 1971 இல் இருந்து மூன்று வருடங்கள் தலைவராகப் பணியாற்றினேன். பின்னர் 1979 இலிருந்து (இடையில் சில வருடங்கள் தவிர) இன்று வரை தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகிறேன்.

கே:- நீங்கள் தலைவராகப் பொறுப்பேற்ற போது உங்கள சங்கத்தின் கீழ் எத்தனை கிளைகள் இருந்தன? இப்போது எண்ணிக்கை அதிகரித்துள்ளதா?

ப:- ஆம். நான் பொறுப்பேற்றபோது 17 கிளைகள் மட்டுமே இருந்தன. இப்போது வேலை நடைபெறும் பொதுவான கிளைகள் 23 உள்ளன. அது மட்டுமன்றிப் புடைவை, சிமெந்து, நூல்கள் முதலியவற்றைத் தனித்தனியே விற்பனை செய்யும் சிறப்புக் கிளைகளையும் உள்ளடக்கி மொத்தமாக 42 கிளைகள் உள்ளன.

கே:- உங்களது தலைமைக் காலத்தில் வேறு எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தினீர்கள்?

ப:- எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் முக்கியத்துவம் கொடுத்தேன். நான் பொறுப்பெடுத்த போது ஏறத்தாழ 50 பேர்வரையே பணி செய்தனர். இன்று அது மூன்று மடங்கிற்கு மேலாக அதிகரித்து 172 பேர் சங்கத்தில் வேலை செய்கின்றனர். பட்டம் பெற்றும் வேலை கிடைக்காமல் இருப்பவர்களுக்கும் அரச வேலை கிடைக்கும் வரை வேலை வாய்ப்பு வழங்குகிறோம்.

**செவ்விகண்டவர்:**
**ம.பா.மகாலிங்கசிவம்**

கே:-நீங்கள் கூட்டுறவுத்துறை தவிர்ந்த வேறு எத்துறைகளில் பணியாற்றியிருக்கிறீர்கள்?

ப:- நான் 1957 தொடக்கம் 1991 வரை ஆசிரியத் தொழிலில் இருந்திருக்கிறேன். எனது ஆசிரியத் தொழிலில் இருபத்தொரு வருடங்கள் நெல்லியடி மகாவித்தியாலயத்திற் கற்பித்திருக்கிறேன். அது மட்டுமன்றி கம்யூனிஸ்ட் பொன். கந்தையாவின் வேண்டுதலின் படி உள்ளூராட்சித் தேர்தலிற் கட்டைவேலி கிராமசங்கத்திற் போட்டியிட்டு வெற்றியும் பெற்றிருக்கிறேன்.

கே:- உங்களுக்கு இலக்கியத்துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

ப:- பாடசாலையில் கற்கின்ற காலத்தில் இலக்கியத்தில் நாட்டம் எனக்கு இருக்கவில்லை. ஏனெனில் அக்காலத்தில் கற்பித்த ஆசிரியர்கள் இலக்கியத்துறையில் நாட்டம் குறைந்தவர்களாக இருந்தார்கள். பண்டிதர்.க. வீரகத்தி, பண்டிதர் கந்த முருகேசனார், கரவெட்டிப் பண்டிதர் கணபதிப்பிள்ளை போன்றவர்கள் அக்காலத்தில் ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்கள் சிறிய பாடசாலைகளிற் கற்பித்ததால் பெரும்பாலரிடம் இலக்கிய ஆர்வத்தை எற்படுத்த முடியவில்லை. எனது இலக்கிய ஆர்வம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலேயே ஏற்பட்டது.



யாழ்ப்பாணத்திலுள்ள நூல் வெளியீட்டாளர்களின் நூல்களின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டு உடனடியாகவே பணங்கொடுத்து உதவும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர் கட்டைவேலி- நெல்லியடி ப.நோ. கூ. சங்கத் தலைவர் தம்பையா சிதம்பரப்பிள்ளை. வெளியீட்டாளரின் அழைப்பிதழ் கிடைத்தால் வெளியீட்டு விழாவிற்குத் தானே நேரிற்சென்று, வெளியீட்டுவிழா மேடையிலேயே நூல்களைக் கொள்வனவு செய்யும் உயர்ந்த பண்பாளர். ஒரு ப.நோ.கூ. சங்கம் விற்பனைப் பணிகளுக்கப்பால் இலக்கிய சேவையிலும் ஈடுபட முடியும் என்பதைத் தனது சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் நீண்ட காலமாகவே நிரூபித்து வருபவர். இவர் சங்கத்திலுள்ள நூலக சேவை, இலக்கிய விமர்சனக் கூட்டங்கள், நூல்களைப் பரிசாக வழங்கல் என்பவற்றின் மூலம் இன்று வடமராட்சியில் இலக்கியத்துறைகளில் ஆர்வம் மிக்க ஓர் இளைஞர் கூட்டம் உருவாக இவர் காரணமாக இருந்தார் என்பது மிகைப்படுத்தல் அல்ல. தமது 77 ஆவது வயதிலும் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்து இலக்கியப் பணியாற்றிவரும் அவரை அவரது கரவெட்டி இல்லத்தில் சந்திந்தோம்.

கே:- அங்கு கற்பித்தவர்களில் இலக்கிய ஆர்வத்திற்குக் காரணமாக இருந்தவர் யார்?

ப:- பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தான் இதற்குக் காரணம். அவர் இலக்கியத்தை எமக்கு ஆர்வம் ஏற்படக் கூடிய வகையில் மிகவும் நகைச்சுவையாகக் கற்பிப்பார். சமயத்தை வைத்துத்தான் இலக்கியத்தை விளக்குவார். இன்னொருவர் அளவெட்டியைச் சேர்ந்த மௌனமுனிவர் பொ.கைலாசபதி. அவர் எமக்குக் கற்பித்தல் முறையியலைப் படிப்பித்தார். இவர்களுடைய வழிப்படுத்தல் தான் எனது இலக்கிய ஆர்வத்துக்குக் காரணம்.

## வெளியீட்டு விழாக்களுக்குத் தாமே சென்று நூல்களை வாங்கி சங்க நூலகத்தில் சேர்த்தவர்

கே:- ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

ப:- நாங்களே நூல்களை வெளியிடத் தொடங்கிய போதுதான் இந்த ஆர்வம் ஏற்பட்டது. 1982 இல் டாக்டர் சுகுமாரின் முதலுதவி பற்றிய நூலுடன் எமது சங்கத்தின் பதிப்புப் பணி ஆரம்பமாகியது. தொடர்ந்து நெல்லை க.பேரனின் உதவியுடன் 12 சிறுகதை எழுத்தாளர்களின் "உயிர்ப்பு" என்னும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டோம்.

## பத்தாயிரம் நூல்கள் கொண்ட நூலகம் ஆயிரத்துக்கும் அதிகமான வாசக சந்தாதாரர்

நூல்வெளியீட்டுக்கான கூட்டுறவுப் பெருமன்றத்தில் தெணியான், குப்பிழான் ஐ.சண்முகன், டாக்டர் ச.முருகானந்தன் ஆகிய புகழ் பெற்ற எழுத்தாளர்கள் அங்கம் வகித்து எனக்கு வழிகாட்டினார்கள். இவற்றுக்கும் மேலாக நானும் ஓர் ஆசிரியன். அதனை விடவும் நல்ல வாசகன்; கலையில் ஈடுபாடு உள்ளவன் என்ற வகையிலும் நூல் கொள்வனவில் ஈடுபட்டேன்.

கே:- இதுவரை எந்தெந்த எழுத்தாளர்களின் எத்தனை நூல்களைக் கொள்வனவு செய்திருக்கிறீர்கள்?

ப:- நாங்கள் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்துக் கொள்வனவு செய்வோம். எத்தனை நூல்கள் என்று எண்ணிக்கை கூற முடியாது. சொக்கன், நந்தி முதலிய இருபதுக்கு மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களிடம் நூல்களை கொள்வனவு செய்துள்ளோம். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் எல்லா நூல்களையும் வாங்கியிருக்கிறோம். பல்கலைக்கழகம், கல்வியற் கல்லூரி என்பவற்றின் சஞ்சிகைகளையும், ஈழத்து அறிஞர்களின் மணிவிழா மலர்களையும் கூடக் கொள்வனவு செய்திருக்கிறோம்.

கே:-இவ்வளவு பெருந்தொகை நூல்களைக் கொள்வனவு செய்யும் நீங்கள் அவற்றை என்ன செய்வீர்கள்?

ப:- ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில், க.பொ.த உயர்தரம், சாதாரணதரப் பரீட்சைகள் ஒவ்வொன்றிலும் அதிக புள்ளிகள் பெற்ற ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வருடாவருடம் பரிசளித்து நடத்துவோம். அப்போது இந்த நூல்களைக் கொடுத்து அவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவோம்.

### பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள்

கே:- இன்று வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து புதிய இளைஞர் பரம்பரை ஒன்று மிகத்தீவிரமாக இலக்கிய முயற்சியில் ஈடுபடுவதற்கு உங்களது நூலகமும், நீங்கள் நடத்தும் இலக்கிய விமர்சனக் கூட்டங்களும் தான் முக்கியமான காரணம் என்று கூறப்படுகிறது. அது பற்றி....

ப:- எம்மிடம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்று உண்டு. ஈழத்துச் சஞ்சிகைகளான ஞானம், மல்லிகை, கலைமுகம், ஜீவநதி என்பனவும் ஒழுங்காகப் பெறப்படுகின்றன. வீரகேசரி, ரைம்ஸ், ஒப்சேவர் என்னும் கொழும்புப் பத்திரிகைகளின் ஞாயிறு இதழ்களும் வாங்கப்படுகின்றன. எம்மிடம் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சந்தா செலுத்திய வாசகர்களாக உள்ளனர். நீங்கள் குறிப்பிடும் புதிய இளைஞர் பரம்பரையிற் பெரும்பாலானோர் எமது நூலக வாசகர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கே:- கூட்டுறவுச் சங்கம் மூலம் வேறு எத்தகைய இலக்கிய முயற்சிகளை மேற்கொள்ளுகிறீர்கள்?

ப:- 'சங்கச் செய்தி' என்ற மாதாந்த இதழை வெளியிட்டு வருகிறோம். இதுவரை 11 இதழ்கள் வெளிவந்துள்ளன. கூட்டுறவு விடயங்கள் மட்டுமன்றி இலக்கியம் சார் படைப்புக்களும் அதில் இடம் பெறுகின்றன. வருடாந்தம் மூன்று , நான்கு நூல்களை அறிமுகம் செய்கின்றோம். அத்துடன் ஒரு நூல் பற்றிப் பல எழுத்தாளர் விமர்சிக்கும் விமர்சனக் கூட்டங்களையும் நடத்துகிறோம்.

***

# போர்ச்சூழல், குடும்பப் பிரச்சினைகளால் மன அழுத்தம்; பாதிப்புற்ற மக்களுக்குத் தொழில் வழிச் சிகிச்சை அவசியம்

பௌதீக ரீதியிலும், மன ரீதியிலும் பாதிக்கப்பட்ட நோயாளர்களைச் சுயமாக இயங்கச் செய்யும் சிகிச்சையே தொழில்வழிச் சிகிச்சை ஆகும். எழும்புதல், நடத்தல் , கதைத்தல் குறைபாடுகள், பக்கவாதம், பாரிசவாதம், அங்கவீனமானவர்கள் போன்ற பல்வேறு நோய்களால் பௌதீக ரீதியில் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கும் போர்ச்சூழல் காரணமாக, குடும்பப்பிரச்சினை, மனஅழுத்தம், சமூகப் பிரச்சனைகள் போன்றவற்றால் மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனநோயாளிகளுக்கும் இச்சிகிச்சை பெரிதும் உதவுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக - உபாதைகள் காரணமாக - கற்பிணித் தாய்மாரில் ஏற்பட்ட தாக்கங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கைவிடப்பட்ட அல்லது நோய்களினால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றார்கள். பல்லாண்டு காலமாக ஏற்பட்டுவரும் போரின் தாக்கங்களால் இடம்பெயர்ந்து வாழ்வதால் - வாழத் துடிக்கின்ற மக்கள் ஏராளம். இத்தகையோரைப் பழக்கப் படுத்தி வாழ்வியல் புனருத்தாரணம் செய்தலே தொழில் வழிச் சிகிச்சையின் அடிப்படைத் தத்துவம் ஆகும். இப்படியான பௌதீக, மானசீக பிரச்சினைகளைத் தொழில் வழிச் சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்ய முடியும்.

| ஆண்டு | சிகிச்சைக்குட்பட்ட நோயாளிகள் (யாழ்.போதனா வைத்தியசாலை) |
|---|---|
| 2005 (மார்ச் - டிசம்பர்) | 222 |
| 2006 | 246 |
| 2007 | 282 |
| 2008(மேவரை) | 92 |
| மொத்தம் | 842 |

**லோ.துஷிகரன்**

## 52 சிகிச்சையாளர்கள் இங்கு தேவை எனினும் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்!

இச்சிகிச்சை பிரதானமாக மூன்று வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது.

(1) நோயாளியை நெறியாள்கைப்படுத்தலும் (Counciling) மனநலச் சிகிச்சை முறைப்படுத்தலும், நடத்தை மாற்றம் ஏற்படுத்தலும்.

(2) சிகிச்சை முறையிலான பயிற்சிகளும் தொழிற்பாடுகளும் அவை தொடர்பான ஆளுமைத் தன்மைகளையும் ஏற்படுத்தல்.

(3) அசைவுகள் ரீதியாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அவர்களுக்கு ஏற்றவாறு மீள்வடிவமைக்கப்பட்ட உபகரணங்களுக்கு வடிவங்களைத் திட்டமிடலும் அதற்கேற்ப நடமாடும் சாதனங்களையும் ஏற்படுத்தலும்.

உலகளாவிய ரீதியில் மூன்று கோணங்களில் தொழில் வழிச் சிகிச்சைகள் செயற்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(1) நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில் வழிச் சிகிச்சைகள் மேற்கொள்ளல். வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், சிறைச்சாலைகள், பாடசாலைகள் அங்கவீனமானோர் நிலையங்களில் சிகிச்சையாளர்கள் நியமிக்கப்பட்டு சிகிச்சைகளை மேற்கொள்ளுதல்.



யாழ்.போதனா வைத்தியசாலைத் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவு கரிதாஸ் - கியூடெக் உதவியுடன் உருவாக்கும் விசேட இருக்கை ஊனமுற்ற குழந்தைக்கு வரப்பிரசாதம்.

(2) மேற்சொல்லப் பட்ட நிறுவனங்களில் சிகிச்சைக்குட்பட்ட நோயாளர்கள் வீட்டுச் சூழல் ஒன்றுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவ்வீட்டுச் சூழல் புனருத்தாரணம் செய்யப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்றவாறு ஒழுங்கமைப்புக்களை அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும் சிகிச்சையாளர்கள் வழங்குவர். இவர்கள் அந்நோயாளிகள் வாழும் செயற்பாட்டிற்கான சூழலை அமைக்கும் சிகிச்சையாளர்கள் ஆவார்கள். இவர்கள் அந்தந்த நிறுவனங்களிலேயே பணிபுரிவார்கள்.

உ+ம்:

* ராகம புனருத்தாரணம் வைத்தியசாலை.

* பிளாஸ்ரிக், ஸ்ரிகாய சத்திரசிகிச்சைகளுக்கு உட்பட்டவர்களுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலை.

* திகண புனருத்தாரண வைத்தியசாலை.

* யாழ். போதனா வைத்தியசாலை. (அண்மைக்காலமாக)

(14 ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2007 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்




தமது பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றுவதற்காக,"பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்குவதாக" பல பெற்றோர் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதிமிக்க சிறந்த பரிசுகள் வழங்குவதாக வாக்களிக்கும் சாதாரண மக்களின் பிள்ளைகளையும் கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலகி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக் களிப்பை அடைந்து கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 10 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 ரூபாவும் வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 353 மாண்வர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 3,014,500 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும். 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் குறைந்தபட்சம் ரூபா 5,000 இருப்பின் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும். அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பின், அவரின் அருணலு கணக்கின் மிகுதி இரட்டிப்பாக்கப்படும். இந்த வாய்ப்பை கடந்த வருடம் நான்கு மாணவர்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் ஒரு நிறுவனமாக உபசரணைப் [illegible] பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமையடைகிறது என வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் (திட்டம் செயற்படுத்துகை) திரு. றிச்சர்ட் ரொட்ரிகோ குறிப்பிடுகிறார். பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்வதும், சேமிப்புப் பழக்கவழக்கத்திற்கு வழிவகுப்பதும் அருணலு சேமிப்புக் கணக்கின் முக்கிய நோக்கம் என்பதனால், பெற்றோருக்கும் மகிழ்ச்சி தருகிறது என்றும், அருணலு பிரபலமானதற்கு உறுதுணையாக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை போவோமா?

பிரதேசமொன்று
ஆடையை இழந்த
அந்தக் கதை சொல்லவா?
வேதனைத் தீயில்
மக்கள் புரண்ட
சோகக் கதை சொல்லவா?
வந்தாரை வரவேற்று
தேன் கனிகள்
கொடுத்து நல்ல
உபசாரம் செய்கின்ற
வலி வடக்குப் பிரதேசம்
விளமீன்கள் பாட்டை
விதைந்து உரைத்து நின்ற
சோளகக் காற்றின்
செழுமையான நேரமது
தொண்ணூறின்
அந்த ஆனி பதினைந்து
மாலைப் பொழுதில்
எவருமே நினைக்கவில்லை
அந்த
அனல் அடிக்கும் கோரம்
நிகழுமென்று
வல்லூறுக் கூட்டங்கள்
வானத்திலே
வட்டமிடத் தொடங்கின
விரையுமந்த
அலுமினியப் பறவைகளை
ஆவென்டு பார்த்த மக்கள்
வாய் மூட முன்னர்
எச்சங்கள் இட்டன
அனல் புயலைக் கிளப்பின
ஓலம் !
எங்குமே ஓலம் !!
என்ன செய்வதென்ற ஏக்கத்தில்
நாலா திசையிலும்
ஆலாய்ப் பறந்தனர் மக்கள்
நான்கைந்து
உயிர்ப்பூக்களை
சருகாக்கிய மகிழ்ச்சியில்
வல்லூறுக் கூட்டங்கள்
வானத்தில் அகல..........
சுடு குழல்கள் ஏந்திய
சிலந்திப் பூச்சிகள்
நகரத் தொடங்கி
எல்லையைக் கடக்க.........
ஓ........
அந்தப் பிரதேசம்
கண்கள் கசக்கி நிற்க...........
அந்த மக்கள் கூட்டம்
கையிலே அகப்பட்டதை
தோளிலே தூக்கி
எங்கே போகிறோமென்று
எதுவுமே தெரியாமல்
கால் பரப்பி
ஓடத் தொடங்கினர்
நாளை வருவோமாமென்ற
நம்பிக்கையில்
எமது நாட்டின்
பிரதேசமொன்று
அகதியாய்ப் போன
சம்பவங்களில்
இதுவுமொன்று
ஊரைவிட்டு
அவர்கள்
எங்கெல்லாமோ ஓடினார்கள்
எங்கெல்லாமோ திரிந்தார்கள்
எங்கெல்லாமோ இருந்தார்கள்
துன்பத்தின் கதவுகள்
இவர்களுக்காக அகலத்திறந்தன.
இன்று.............
பதினெண்ணாண்டுகள்
கரைந்து விட்ட நிலையில்
இவர்களுக்குக் கிடைத்ததோ
அகதியென்ற பட்டத்தைத்தவிர
வேறொன்றுமில்லை
இவர்களிடம்
நிலைத்திருப்பதென்னவோ
துன்பம் என்ற
நிலையான சொத்தைத் தவிர
வேறேதுமில்லை
இவர்களுக்காகக்
கதைத்தவர்களோ சிலர்
அவர்களில்
மரணித்தவர்களோ பலர்
நாளை போவோமென்ற
இவர்கள் கனவு
இன்னும் இருக்கிறது.
ஆனால்........
யார்தான்
அழைத்துப் போவார்கள் ?

அ. சூரியன் (ஊறணி)

(15.05.1990 இல் இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்களின் சோகம் இன்னமும் நீங்கியபாடில்லை. நாளை போகலாம் என்ற அவர்களின் ஏக்கத்தை நினைவு கூரும் கவிதை இது).



காசி ஆனந்தன் - உலகளாவிய ... பெரும் தமிழ்க்கவிஞர். உணர்ச்சிக் கவிஞர் ... புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பட்டம் சூட்டப்பட்டவர். தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் மூத்த கவிஞர்களில் ஒருவர். டாக்டர் மு.வரதராசன், பேராசிரியர் ந.சஞ்சீவி ஆகியோருடன் நெருங்கிப் பழகிய மாணவன் - புலமையாளர். கவிஞன் பிறக்கின்றான் என்ற இலட்சணத்திற்கு ஏற்ப காசி ஆனந்தனும் ஒரு பிறவிக் கவிஞனே.

அவரைக் கவிஞன் என்றே மிகப் பலரும் அறிவர். ஆனால் அவர் நல்ல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். குறுங்கதைகளையும் படைத்துள்ளார். 'பெண் தெய்வம்' அவரின் சிறந்த சிறுகதைகளில் ஒன்று. மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அவருக்கு இப்போது வயது 71. பட்டதாரி. இப்போது தமிழகத்தில் வசிக்கிறார்.

# பெண் இதயம் (சிறுகதை)

கனவிலே பிதற்றிக் கொள்வது போலத் தயாளன் விடுத்த அழைப்புக்கு முகத்தைத் திருப்பினேன். அவனது நிலையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"என்ன தயா...........?"

"..............................."

அவன் எதுவுமே பேசவில்லை. போர்வைக்குள் உடலைப்புதைத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தான். மங்கலாக எரிந்து கொண்டிருந்த மேசை விளக்கின் திரியை நான் தூண்டிவிட்டேன். என் எண்ணங்களையும் தூண்டிவிட்ட மாதிரித்தான் அது.......

தயாளனைச் சில நாள்களுக்கு முன்தான் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவன் ஒரு பிரபல எழுத்தாளன். கவிஞன் என்றெல்லாம் அறிமுகம் செய்து வைத்தவர் வருணித்துக்கொண்டே போனபொழுது நான் அடைந்த பீதிக்கு அளவே இல்லை. இந்த எழுத்தாளர்கள் மிகவும் பொல்லாதவர்கள் என்பது நன்றாகத் தெரியும்.


மெலிந்த தோற்றந்தான்....... என்றாலும் மிடுக்கான நடையும் குறும்பான பார்வையும் அவனின் சொத்துக்களாக அமைந்து கிடந்தன. மெய்தான்.... எதை மறந்தாலும் தற்கால முறைக்கு ஏற்ற மாதிரித் தலைமயிரை அவன் படுத்தியிருக்கும் பாடு - அப்பப்பா! அதை மறக்கவே முடியாது. அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட அதே நிமிஷம் நாங்கள் நண்பர்களாக மாறினோம். அவன் இயற்றும் கவிதைகளைப் படித்து அனுபவிப்பதில் நான் நாள்களை மறந்திருந்தேன். கலைஞன் என்ற வகையில் அவனைப் பார்க்க அடிக்கடி ஆதரவாளர்கள், அபிமானிகள் வருவார்கள். கலைஞர்களைப் போற்றும் உலகம் ரசிகர்களை மறந்துவிடுகின்ற காரணத்தைப் புரியாது நான் தவித்தேன். ரசிகர்களால்தானே கலைஞர்கள் வாழவும் பிரகாசிக்கவும் முடிகிறது! இந்த நிலையில் அடிக்கடி தயாளனிடத்தில் எனக்குப் பொறாமை ஏற்படுவதுமுண்டு. தயாளனைக் கலைஞன் என்ற மதுக்கலசத்திலிருந்து ரசிகனென்ற தேனீயின் நிலைக்கு எடுக்க நான் தீவிரமாக முயற்சித்தேன். என் முயற்சி பெரியதொரு காதல் காவியத்துக்கு வித்திடுமென்று நான் அப்போது கருதவில்லை. ஓர் இரவு...........

கோயில் திருவிழா! இருவரும் சென்று வரலாமென்று தயாளன் கேட்டான். ஆலயங்கள் சிறந்த பொருள்காட்சிச் சாலைகள்! ஆண்டுக்கொரு தடவை வரும் திருவிழாக்களில் அவை பொருள்காட்சிச் சாலைகளாகவும் காதல் களியாட்ட மண்டபங்களாகவும் மாறிவிடுகின்றன. தயாளன் என்னைத் துரிதப்படுத்தியபோது நான் அவனைப் பக்தன் என்று நினைக்க முடியுமா? நானும் அவனும் ஆலயத்தை ஒருவாறாக அடைந்தோம். தயாளனை நான் சதா அவதானித்துக் கொண்டே இருந்தேன். அவன் ஒரு கலைஞன் அல்லவா!

பக்தர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் கூட அப்படி ஆலயத்தை வலம் வருவதில்லை. ஒரு தடவையல்ல - ஆலய நியதிப்படி மூன்று தடவைகளுமல்ல - இருபது முப்பது தடவைகள் அவன் ஆலயத்தை வலம் வர ஆரம்பித்தபொழுதே அவனுக்கு எங்கோ 'அம்மன் தரிசனம்' கிடைத்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன். 'கலைஞன்' என்ற படியிலிருந்து ரசிகனென்ற நிலைக்கு அவன் மாறுவதைக் காண என் உள்ளம் பூரித்தது. அப்பாடா! இந்தக் கலைஞர்களை கலைஞர்கள் என்று சொல்வதைவிட

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஔவையாருக்குக் கீரைக்கறி அமுதம் என்றால் காளமேகத்தாருக்கோ பூசணி கைலாசமாக இருந்தது!



"நன்றி மறவேல்", உப்பிட்டவரை உள் அளவும் நினை" என்பவை இன்றும் நமது நடைமுறை வாழ்க்கையில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் வார்த்தைகளாகும்.

சங்ககாலத்துச் சொற்றொடர்கள் பல காலப்போக்கில் மருவி- மாறுபாடான விதத்தில் பயன்படுத்தப்படுவதால், அவற்றின் உட்கருத்தும் மயக்கத்தைத் தரும் விதத்தில் அமைந்து விடுகின்றது.

பசிக்கு உணவளித்து உதவும் ஒருவரை ஒருபோதும் மறத்தலாகாது என்ற அர்த்தத்தில் உள் அளவும் என்பது திரிவு பெற்று இன்று பலரால் அது "உள்ள அளவும்" எனப் பொருள் கொள்ளப்பட்டு வருகிறது.

உள் அளவும் என்பதன் மூலம் உள்ளத்தளவும் என்ற பொருள்பட, வெறும் வார்த்தைகளால் நன்றி பாராட்டுவதாக இல்லாமல், உள்ளத்திலே அந்த நிகழ்ச்சியை நிலை நிறுத்தி நன்றி செலுத்த வேண்டும் எனப் பொருள் கொள்வதே சரி எனக் கருதப்படுகிறது.

சங்ககாலப் புலவர்களுக்கும் வறுமைக்கு நிறையவே தொடர்பு இருந்து வந்தது. பல சமயங்களில் பெரும் புலமை மிக்க புலவர்கள் பசியால் வாடி வருந்த வேண்டிய நிலையும் ஏற்பட்டதுண்டு.

அத்தகைய வேளைகளில் தம்மை அன்புடன் உபசரித்து அன்னமிட்டுப் பசி தீர்த்தோருக்கு அப் புலவர்களால் கைமாறு எதனையும் செய்ய முடிந்ததில்லை.

பதிலாக - தமது நன்றிக்கடனைச் செலுத்தும் வகையில் தமக்கு உண்டியளித்து உதவித் தம் பசி போக்கிய நன்மனத்தோரையும் அவர் தம் சமையலையும் புகழ்ந்து கவி பாடியே தமது நன்றிக் கடனை வெளிப்படுத்திக் கொண்டனர். அத்தகைய நிகழ்வுகளில் ஒன்றிரண்டை இங்கு எடுத்து நோக்குவது பொருத்தமுடைத்து.

பெண் புலவர்களிலே பெரிதும் போற்றப்படுபவர் ஔவையார் ஆகும். மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட ஔவையார்கள் தமிழ் இலக்கியப் பரப்பிலே சுவடு பதித்திருப்பதை ஆழ்ந்து கற்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

ஔவையாருக்கு வேளூர் என்ற ஊரிலே இருந்த பூதன் என்பவன் ஒரு நாள் விருந்து கொடுத்தான். அந்த விருந்தைத் தன் உள் அளவும் நினைத்து, கவிதையாக உருவாக்கினார் ஔவையார். மிகவும் அழகான வெண்பாவாக வெளிவந்தது பூதனின் விருந்துப் புகழ்.

**வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமுரென வேபுளித்த மோரும்- திரமுடனே**
**புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ(று)**
**எல்லா உலகும் பெறும்.**

வரகரிசிச் சோறும், கத்தரிக்காய்த் துவட்டலும், நன்றாக முரமுர எனப்புளித்த மோரும் சேர்த்து, பசியோடு இருக்கிறார் ஔவையார் என்பதைப் புரிந்து கொண்டு அழைத்துச் சென்று, வேளூரில் இருக்கும் பூதன் என்பவன் விருந்து கொடுத்தானாம்.

அந்தப் பூதன் கொடுத்த விருந்து, இந்த உலகம் எல்லாம் சேர்ந்தால் என்ன பெறுமதியோ அந்த அளவு பெறுமதிவாய்ந்ததுஎன்று புகழ்ந்து பாடுகிறார் ஔவையார்.

சாதாரண ஒரு பூதன், புலவர் ஔவையாருக்கு ஒரு நேர விருந்து வைத்து, இலக்கியத்தில் இடம் பிடித்து விட்டான்.

முடியுடை மூவேந்தரின் சூழ்ச்சியால், கொடை வள்ளலும், பறம்புமலை அரசனுமான பாரி கொல்லப்படுகிறான். ஒரு இடையனின் வீட்டிலே பாரியின் பிள்ளைகளான அங்கவை, சங்கவை என்ற பெண்கள் அநாதைகளாக வந்து தங்கி இருக்கின்றனர். மழையிலே நனைந்து நடுங்கிக் கொண்டு அச்சிறு குடிலுக்குள் நுழைகிறார் ஔவையார்.

நனைந்த ஆடைக்கு மாற்றாடை கொடுத்து, உண்ணுவதற்கு உணவும் கொடுத்தனர் அப் பெண்கள். ஔவையாரின் உள்ளத்திலே அவர்கள் கொடுத்த உணவு நீங்காது இடம் பெற்று விட்டது. உப்பிட்ட அவர்களை உள் அளவும் நினைத்தார் ஔவையார். பாடல் உருவாகியது.

**வெய்தாய் நறுவிதாய்**
**வேண்டளவுந் தின்பதாய்**
**நெய்தான் அளாவி**
**நிறம்பசந்த - பொய்யா**
**அடகென்று சொல்லி**
**அமுதத்தை இட்டார்**
**கடகம் செறிந்த**
**கையார்**

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சமயத்தை உங்கள் பொழுது போக்கு ஆக்காதீர்; வளமான வாழ்க்கைக்கு வழியுமாக்காதீர்!

இன்றைய மானுடச் சாதியின் வாழ்க்கை நிலையினை எண்ணிப் பார்த்தால் நீக்க முடியாத ஏக்கமே மேலிடுகிறது. மனிதன் கடந்த பல நூற்றாண்டுகளாகத் திறமையாகவே வாழ்ந்து வருகிறான்; அவன் வாழ்க்கையில் அடிக்கடி நேர்ந்த இயற்கை இன்னல்களையும் வெற்றி பெற்றிருக்கிறான். அவனைச் சுழலச் சிதற அடித்த காலத்தை வென்றிருக்கிறான். பேருலகத்தை இணைத்து வெற்றி பெற்றிருக்கிறான். அம்மம்மா? அரிய சாதனை! அற்புதச் சாதனை!

என் பாட்டி இனிதாகக் காட்டிச் சோறூட்டிய அம்புலியைக் குடியேறிக் கூடாரமாக்கும் குரல் கேட்கிறது. அவனுடைய அறிவுச் சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை. அண்டங்கள் இல்லை; நினைத்து நினைத்து மகிழத்தக்க சாதனை!

ஆனாலும் சாதனையின் மகிழ்ச்சியை முழுவதும் துய்க்க முடியவில்லை. காரணம் உட்பகை ஓய்ந்த பாடில்லை.

நிலவுலகங்கள் இணைக்கப்பெற்றன. ஆனால் இணைக்கவேண்டிய சிறந்த நெஞ்சங்கள் இணைக்கப்பெறவில்லை.

செல்வங்கள் செழித்து வளர்ந்தன. ஆனால் அல்லல் தரும் வறுமை போய்விடவில்லை. கருத்துக்கள் வளர்ந்தன. ஆனால் மோதிக்கொள்ளும் விலங்குணர்ச்சி போனபாடில்லை.

உலாவும் மாளிகைகள் உயர்ந்தன. ஆனால் ஒழுக்கத்தில் உயர்வில்லை.

திருக்கோயில்கள் எழுந்தன. ஆனால் சிறைச் சாலைகள் மூடப் பெறவில்லை.

கடவுளின் கருணை பேசப்பெற்றது. ஆனால் இரக்கம் என்பதொன்று எள்ளளவும் சிந்தையில் உண்டாகவில்லை.

இஃதென்ன விந்தை! மாளிகை கட்டி முடிப்பது வாழ்ந்தின்புறவா? அல்லது வாழ்விழந்து துன்புற்று அல்லல்படவா? இந்த அவல நிலைக்குக் காரணம் உண்மையான சமயச் சீலம் உலகில் தோன்றி வளரவில்லை என்பதேயாம்!

சமயநெறி என்பது உடற்சார்புடையதன்று. நீங்கா உயிர்ச் சார்புடையது. ஆனால் இன்றோ சமயம் பெரும்பாலும் உடற்சார்புடையதாக மட்டுமே விளங்குகிறது. சமயச் சின்னங்களை நெற்றிகள் தாங்கினாலும் நெஞ்சங்கள் தாங்கவில்லை. மைபொதி விளக்கனையார் மலிந்து வருகின்றனர். "பூச நீறு போல் உள்ளம் புனிதர்கள்" என்று சேக்கிழாரின் செந்நெறிக்கு ஏற்றவாறு நெஞ்சுணர்வில் தூய்மை படரவில்லை. சமயமும் ஒரு வளர்ந்த அறிவியலேயாம். எப்படி விஞ்ஞானத்தின் விளைவு வீணாகப் போவதில்லையோ அது போலவே சமயச் செந்நெறியின் பயனும் வீண்போவதில்லை.

தண்ணீரில் கிடப்பது மீனுக்குப் பொழுது போக்கன்று: அஃது ஒரு பகுதி வாழ்க்கையுமன்று: தண்ணீரில் கிடப்பதேநான் மீனுக்கு வாழ்க்கை. அதுபோல் நமக்கும் சமய வாழ்க்கை அமைய வேண்டும். ஆனால் சமயம் சிலருக்குப் பொழுது போக்கு: பலருக்குப் போலிப் பாவக் கழுவாய்.

ஒரு சிலருக்கு அதுவே வாழ்க்கைத் தொழில். வேறு சிலருக்கு வளம்பல படைத்து வாழும் வகை.

இதுவா சமயம்? நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் எழுந்தும் என்ற திருஞான சம்பந்தர் திருமொழியை எண்ணுங்கள்.

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு இயங்கினான்" என்ற அப்பரடிகளின் அருள் மொழியை எண்ணுங்கள்.

சமய ஒழுக்கம் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுதும் கலந்து கொண்டிருக்கவேண்டும். சிந்தனையும் செவ்விய சொல்லும் செயலும் சமயச் சீலம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அவனுடைய வாழக்கையின் பல்வேறு துறைகளிலும் சமயத்தின் மாறா முத்திரைபதிந்து விளங்க வேண்டும். அப்பொழுது தான் மனிதன் முழு மனிதனாகிறான் அவன் கடவுள் விரும்பும் பொருளுமாகிறான்.

***



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் இதயம்...

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

சிறந்த ரசிகர்கள் என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்! பந்தலிலே படர்ந்து நின்ற மல்லிகை போல ஆலயத்தூண் மீது சாய்ந்து கொண்டு நின்ற அந்த இளம்பெண்ணை அவன் எவ்வளவு அருமையாக ரஸித்தான் தெரியுமா?

திடீரென்று தோள்களைத் தொட்டு உலுப்பிய பொழுதுதான் எங்கோ கனவு மண்டலத்திலிருந்து எண்ணங்களென்ற படிகளால் இறங்கி வருபவனைப் போலச் சுய நினைவுக்கு வந்தான் தயாளன்.

''இல்லை மணி..., பெண்கள் எவ்வளவு மென்மையானவர்கள் என்று பார்! அதோ! அந்தத் தளிருடலைப் பார்! தாரகை விழிகளைப்பார்! அவர்களுடைய இதயம் கூட மென்மையானது தான் மணி.......''

அவன் அளந்து கொண்டே போனான். அப்போதுதான் நான் அவளைப் பார்த்தேன்....

ஆனந்தி. அவள்தான் தயாளனின் ரசனையை ஆலயத்திலே கிளறிவிட்ட 'அழகி! கற்பனை உலகில் சஞ்சரித்து உவமைகள் தேடும் அவனை அவள் பலமாக ஒரு தடவை உலுப்பி விட்டாள்!

ஆலயத்திற்கு இன்று வருபவர்களெல்லாம் காவி தரித்து திருநீறு பூசிய நெற்றியுடனா வருகிறார்கள்? சுருளாக்கிக் கட்டிய அப்பக்கொண்டை - இடுப்பைச் சுருக்கி இறுக்க் கட்டிய 'நைலோன் சாறி' - மாங்காய் மாலை ........ இத்தனை 'மேக்கப்' அழகுடன் வந்திருந்த ஆனந்தியின் அழகிலே தயாளனின் ரசனை ஊற்றெடுத்ததில் குற்றமில்லையல்லவா? கலைஞனின் கண்களிலே அவள் அற்புத ஓவியமாகத் தென்பட்டாள். புதியதொரு கதாபாத்திரமாகத் தோற்றமளித்தாள். தொடர்ந்து ஐந்து இரவுகளாக அவன் திருவிழாவுக்குச் செல்லத் தவறவில்லை என்றால் தயாளனுக்குத் தணியாத காதல் பிறந்திருந்தது. காதலென்பது இளம் ஆண், பெண் உள்ளங்களிடையே ஏற்படும் திடீர் அன்புதானே!

அவளை அவன் விரும்பினான்....... தன் அகன்ற நெஞ்சத்தின் ஆழத்திலே அவளின் திருவுருவத்தைப் பதித்து வைத்தான். உள்ளத்திலே முட்டும் புதுப்புது உவமைகளையெல்லாம் சேர்த்து அற்புதமான காவியங்களையெல்லாம் சிருஷ்டித்தான்!...... ஆனாலும் அந்த ஆலயத்தில் ஆனந்தியை அவனால் பார்க்கத்தான் முடிந்ததே தவிர அவனால் பேசமுடியவில்லை....... உறவாட இயலவில்லை.

நிமிஷத்துக்கு நிமிஷம் ஆனந்தியோடு பேச வேண்டும் என்று தயாளன் துடித்தான்.... ஓடோடியும் முயற்சிகளெடுத் தான்..... ஆனால் அவளோ மறைவிலே வெண் முத்தாக, விலை மதிக்கமுடியாத செல்வமாக - இருந்தாள்....... ஆழ்கடலில் சுழியோடியாவது அந்த முத்தை எடுத்துவிட வேண்டுமென்று அவன் தீவிரமாக முனைந்தான்.....

ஓசை மீண்டும் கேட்டது ''மணி.......! மணி...!''

சிந்தனை கலைய மீண்டும் படுக்கையைத் திருப்பிப் பார்த்தேன். தயாளன் இப்பொழுது கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருந்தான்.......

''என்ன தயா..... கனவு அற்புதமா?'' நான் மெதுவாகக் கேட்டு வைத்தேன். படுக்கையிலிருந்து எழுந்து வேளையல்லவா -?

அவனது முகத்தில் படர்ந்திருந்த சோக அடையாளங்களை என்னால் அவதானிக்க முடியவில்லை.

''மணி தூங்கினால்தானே நான் கனவு காண்பதற்கு. ஒழித்து வைக்க முயற்சிக்கிறேன்....... முடியவில்லை'' வேதனை கலந்த குரலில் கூறினான் அவன்.

''என்ன தயா கூறேன்! பைத்தியமா உனக்கு?''

''ஆமாம் மணி.... பைத்தியம் தான் பிடித்து விடும் போலிருக்கிறது. நான் அவளோடு பேச முயற்சித்தேன். பரிசு என்ன தெரியுமா? கிண்டல் மொழி! ஏளனப்பார்வை! அவள் வேறு யாரையோ காதலிக்கிறாளாம்........ அதற்காக என்னை உதாசீனம் செய்ய வேண்டுமா? சொல்! அவள் மீது நான் கொண்டுள்ள பாசத்துக்காக ஆவது....... மணி! பெண்களுக்கு இதயம் உண்டு என்று சொல்வார்கள். ஆனால் எல்லாம் வெறும் சுயநலம் தான். வனிதையர்கள் வச்சிர நெஞ்சு கொண்டவர்கள்...''

அதற்கு மேல் தயாளன் பேசவில்லை.! போர்வையை மீண்டும் அணைத்துக் கொண்டான். பெண்களை விடப் போர்வையில் அவனுக்கு அதிகப் பிரியம் இருக்கலாம்.........!

நான் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தேன். ஒருவன் காட்டும் அன்பை உதாசீனம் பண்ணும் பெண்கள் எவ்வளவு கொடியவர்கள்! அவனைக் கணவனாக்க விரும்பாவிட்டாலும் அவனுடைய நெஞ்சத்துக்கு ஆறுதலும் தேறுதலுமாவது அளிக்க வேண்டாமா அவர்கள்? ச்சே! பெற்றெடுத்த குழந்தையின் கழுத்தைத் திருகிக் கொலைசெய்து விடுபவர்களும் பெண்கள் தானே....... பெண்களாவது....... இதயமாவது.......... திடீரென்று என் சிந்தனைக் கயிறு அறுபட்டது. அதற்குக் காரணம் அங்கு காட்சியளித்த காரிகைதான். எனக்கு என் கண்களை நம்பமுடியவில்லை. அங்கு வந்தவள் வேறுயாருமல்ல. ஆனந்தியேதான்.

விடிந்ததும் விடியாததுமாக இந்த வேளையில் இவள் ஏன் இங்கே் வரவேண்டும்? தயாளனுக்குக் கொடுத்த தொல்லை போதாதென்று இன்னும் கொடுத்து விட்டுப்போக வந்திருக்கிறாளோ........! அவளை ஒரேயடியாக விரட்டிவிட அரவமில்லாமல் எழுந்தேன். ஆபத்து வந்துவிட்டது. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை மூடி மறைத்துக் கொண்டு படுத்திருந்த தயாளனுக்கு ஆனந்தி வந்தது எப்படித்தான் தெரிந்ததோ. எல்லாம் மானசீக உணர்வின் சக்தியாகத்தான் இருக்க வேண்டும். இருசோடி கண்களும் சந்தித்தன. உடனே நான் என் கண்களை இறுக மூடிக்கொண்டேன். ஆனால் காதுகளை மட்டும் நன்றாகத் தீட்டிக் கொண்டேன்.

தயாளன் கட்டிலடியிலிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

**ஆனந்தி:** ''என்னை மன்னித்து விடுங்கள் அத்தான். உங்களை இன்னாரென்று அறியாமல் உதாசீனம் செய்துவிட்டேன். நான் காதலித்தது வேறு யாரையும் இல்லை கவிஞர் தனத்தைத்தான். தனம் என்பது உங்கள் புனை பெயர்தான் என்று தோழி பத்மா நேற்று இரவு என் வீட்டுக்கு வந்திருந்தபோது சொன்னாள். இரவு பூராவும் எனக்குத் தூக்கமே வரவில்லை அத்தான். என் தவறுக்காக அழுது அழுது.........

**தயாளன்:** கன்னங்களைச் சிவப்பாக்கி அழகுக்கு அழகு செய்திருக்கிறாய். தவறு உன்னுடையதல்ல ஆனந்தி. நானாவது என்னைச் சரிவர அறிமுகப்படுத்தியிருந்தால் உனக்கு இந்தக் கஷ்டம் நேர்ந்திருக்காது. அதுவும் ஒரு வழியில் நல்லதாகப் போயிற்று. உன் காதல் உள்ளத்து உறுதியை வெளிப்படுத்த அருமையான சந்தர்ப்பம் ஏற்பட்டதே - அது ஒன்றே போதாதா.

**ஆனந்தி:** ''போங்களத்தான்.''

**தயாளன்:** ;'எங்கே போவது? இங்கே வா அன்பே.''

இதற்கு மேல் நான் அங்கிருப்பது சரியாக எனக்குப்படவில்லை. நான் போய்விட்டு அப்புறம் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே வெளியேறினேன். * * * * * *

*நன்றி: சுதந்திரன் சிறுகதைகள்.*


STUDY IN EASTERN EUROPE
MEDICINE & ENGINEERING


Group of Sri Lanka Students at Vitebsk State Medical University (Belarus)

Belarus இல் உள்ள மாநில பல்கலைக் கழகங்களில் அனுமதி
- இலங்கை மருத்துவ சபை, உலக சுகாதார ஸ்தாபனம் ஜி.எம்.சி. பிரித்தானியா, அமெரிக்கா, மற்றும் 150நாடுகளில் அங்கீகாரம் பெற்றது.
- உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் செய்யப்படும்.
- 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருத்துக்களை பரிசீலிக்கலாம்.
- மருத்துவத்துறையில் PhD/ சிறப்பு கற்கை

விஸா - 100% உத்தரவாதம்

To register & for information - 0773017883

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane (Entrance from Duplication Rd) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Colombo-6.
Tel:0112586418

www.patheacademy.org



UNIVERSITY of CAMBRIDGE
ENGLISH COURSES
உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்

CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)
- PET பரீட்சைகள் 22.11.2008 இல் யாழ்ப்பாணத்தில் Cambridge University Examiners ஆல் நடாத்தப்பட்டு London க்கு விடைத்தாள்கள் அனுப்பிவைக்கப்படும். இரண்டு மாதங்களில் பரீட்சைப் பெறுபேறுகள் வந்துசேரும். இது ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடநெறியாகும்.
- அடிப்படையில் இருந்து English போதிக்கப்படும் பாடநெறியாகும். நீங்கள் IELTS எடுக்க இருப்பவரானால் முதலில் இந்தப் பாடநெறியில் பயின்று PET பரீட்சை எடுத்தபின் IELTS பாடநெறியைப் பின்பற்றலாம்.
- வகுப்புக்கள் திங்கள் முதல் வியாழன்வரை வார நாட்களல் காலை 8 மணிமுதல் 10மணிவரை நடைபெறும். வகுப்புக்கள் 02.07.2008 இல் ஆரம்பமாகும்.

CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)
- இரு ஒரு மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி. உலகின் பெரும் பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கில தகுதிக்கு IELTS இற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISHCOLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புகள் திங்கள் முதல் வியாழன் வரை காலை 11.00 மணிமுதல் பிறபகல் 1.00மணிவரை நடைபெறும். பரீட்சை டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இலிருந்து கிடைக்கப் பெறுவீர்கள்.

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை ஆங்கில உயர்கல்வி பெற எமது கல்லூரியில் இன்றே சேருங்கள்.

புதிய வகுப்புக்கள் 02.07.2008 இல் ஆரம்பமாகின்றன.

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0602216027



உடன் விற்பனைக்கு
நல்ல இன அல்சேசன் இரு நாய்கள் (ஆண், பெண்) உடன் விற்பனைக்கு.
தொடர்பு: குமரன், மாட்டுவில் வடக்கு, சாவகச்சேரி (முத்துமாரியம்மன் கோயிலடி). 0776703359.



பிள்ளையார் அச்சகம்
குறைந்த செலவில் Cool Lamination செய்துகொள்ளலாம்.
பிள்ளையார் அச்சகம்
பச்சை மாளிகை,
வண்ணார்பண்ணை சிவன்கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



எல்லையற்ற செய்தியாளர்கள்
REPORTERS WITHOUT BORDER




நீங்களும் செய்தியாளர் ஆகலாம் ஆம்..... அது வெகு இலகுவானது!
எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அணியில் நீங்களும் ஏன் இணைந்து கொள்ளக் கூடாது? உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நிகழ்வுகளை எங்களுக்கு அறியத்தாருங்கள். புகைப்படங்களையும் அனுப்பலாம்.

அவை உதயன் பத்திரிகையிலும் அதன் சர்வதேசப் பதிப்பிலும் வெளியிடப்படும்.
தாமதிக்காதீர்கள்! இன்றே உரிய தரவுகளுடன்
news@uthayan.com
photo@uthayan.com
எனும் ஈ - மெயில்களுக்கு அனுப்புங்கள்



புகைப்படங்கள், செய்திகளில் தமது பெயர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அதனைக் குறிப்பிடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்கள் நியாயமான கட்டணத்தில் தரமான கல்வி பெற தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மிகவும் பொருத்தமானவை

**இந்த கட்டுரையின் நோக்கமாவது இந்தியாவில் (குறிப்பாகத் தமிழ் நாட்டில்) உயர்கல்வி பற்றிய அடிப்படை அறிவினையும் ஒரு சமுதாய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்படுத்துவதாகும். இதன் முதற்பகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளியாகியிருந்தது.**

சார்க் நாடுகளுக்கு, இந்திய அரசு வருடந்தோறும் குறிப்பிட்ட அளவு புலமைப் பரிசில்களை மேற்படிப்புக்கு என வழங்குகின்றது. ஆனால் அதனது அளவு இந்தியாவில் கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் சொற்பமே.

புலமைப்பரிசில் பெறுவதற்கான படிமுறைகள்

இது சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் இந்தியத் தூதரகத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அடிப்படைக் கல்வித் தகுதி உயர்தரத்தில் 3 பாடங்களில் சிறப்புச் சித்தி. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெப்ரவரி

## 'கல்வி நலன் நாடி'

15 இற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 'சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து குறிப்பிட்ட அளவு விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்படும். (Short listed) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்வில் அவரவர் பாடப்பிரிவு சம்பந்தமான கேள்விகள், ஆங்கிலத்தில் உள்ள புலமை என்பன பரிசோதிக்கப்படும்.

தகுதியானவர்களுக்கு இந்தியாவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் சம்பந்தமான கைநூல் வழங்கப்பட்டு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவிற்கான சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இந்தக் கையேட்டின் ஒரு பிரதியானது
Indian Cultural Centre
133, Boudhaloka Mawatha
Colombo - 4 என்னும் இடத்திலும் பார்வையிடலாம்.

இறுதியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் டெல்லிக்கு அனுப்பப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் கல்வியாண்டானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஓகஸ்ட் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படுகின்றது. மேலதிக தகவல்கள் பெற்றுக்கொள்ள:-

www.hci.colombo.org இணையத்தளத்திலும்

Indian High Commission
Education Wing
36,Galle Road, Colombo - 3
Tel.0112421605

ஆயிரக்கணக்கில் இலங்கை மாணவர்கள் இந்தியாவில் பயிலும் சந்தர்ப்பத்தில் தூதரகத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகிறது. அதுவும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆங்கிலப் புலமையும் பரிசீலித்து வழங்கப்படுவதுடன் தெரிவிற்கான கால அளவும் அதிகமாகும். அத்துடன் இறுதி முடிவானது டெல்லியில் உள்ள அலுவலகத்தில் எடுக்கப்படுவதால் பெரும்பாலான மாணவர்களின் விருப்பத்திற்கு அமைவான பாடப்பிரிவிற்கான சந்தர்ப்பங்களும் நிச்சயமற்றவையே!

பெரும்பாலான மாணவர்கள் இந்தியாவில் உள்ள கல்லூரிகளை நேரடியாக அணுகுகிறார்கள். இது விருப்பத்திற்கு உரியதும், மிகவும் இலகுவானதும், கால விரயமற்றதுமான நடைமுறையாகும். ஆனாலும் இதிலும் சில நடைமுறைச்சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாக் கல்லூரிகளும் வெளிநாடுகளில் இருந்து வரும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தகுதியை கொண்டிருப்பதில்லை. அவற்றுக்கான அனுமதிகளை இந்தியத் தூதரகம் வழங்குவதில்லை.

இங்கு நடைமுறை சிக்கல் என குறிப்பிடப்படுவது என்னவெனில், அனுமதி வழங்குவதற்குரிய அடிப்படை தகுதிகள் திருப்தியாக இருந்து வெளிநாடுகளில் இருந்து வரும் மாண்வர்களை பயில்விப்பதற்கான ஆர்வம் காட்டாத கல்லூரிகள் இருக்கையில் சில கல்லூரிகள் பெயரளவிலான தகுதிகளோடு வெளிநாட்டில் உள்ள மாணவர்களை ஆர்வம் காட்டுவது தான்! குறிப்பாக, இலங்கையில் உள்ள சீரற்ற சூழ்நிலையை பயன்படுத்திப் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து வெளியேற தவிக்கும் மாணவர்களை இவர்கள் ஒரு பெரும் வியாபார சந்தை வாய்ப்பான கண்ணோடு நோக்குவது தான், இதனால் எம் மாணவர்கள் மீள முடியாத துன்பத்தில் சிக்குண்டு இருக்கின்ற சில சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

உரிய மாணவர்களுக்கு விஸா ஆனது தற்போது ஒரேயடியாக கல்வி காலம் முழுவதற்கும் வழங்கப்படுகிறது.

மேலும் மிக முக்கியமான அம்சமாக கல்லூரித் தெரிவில் கொள்ள வேண்டியது குறிப்பிட்ட கல்லூரியில் ஏற்கனவே பயின்று கொண்டிருக்கும் மாணவர்களின் தொடர்பினைப் பெற்று அவர்களுடன் கலந்தாலோசித்து பின்னர் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகும்.

இது பின்னர் மாணவர்கள் தமது தேர்வு பற்றிய வருத்தத்தினை தவிர்த்துக் கொள்ள உதவும். ஒருமுறை குறிப்பிட்ட கல்லூரிக்கு மாணவனை எடுத்துக் கொண்டால் அதில் மாற்றங்கள் கொண்டு வருவது மிகவும் சிரமமானது.

இப்போது எம்முன்னால் எழுந்துள்ள கேள்வி யாதெனின், எவ்வாறு தரமான கல்லூரியை நியாயமான கட்டணத்தில் தெரிவு செய்வது?

**இவ்விடயத்தில் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்களும் நடைமுறைகளும்:-**

பல்கலைக்கழகங்கள் பொதுவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

Affiliated Colleges ISO தரச் சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

Technical Education தரச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

இவை எல்லாம் சட்டப்படி என்பதால் எல்லாக் கல்லூரிகளும் இவற்றினை கொண்டிருக்கலாம்.

ஆனால் இந்தியத் தூதரகத்தில் உள்ள கல்லூரிகளின் தகவல்கள் அடங்கிய கையேட்டில் உள்ள பட்டியலில் குறிப்பிட்ட இந்த வகையான கல்லூரிகளினூடாகக் கல்வித் தரம் சொல்லிக் கொள்ளும் படியாக இருக்காது.

உதாரணத்துக்கு இரு கல்லூரிகளை எடுத்துக் கொள்வோம். முதலாவது தரமான கல்வியை வழங்கும் அதே சமயத்தில் இரண்டாவதில் கல்வித் தரமானது குறைவாகவே இருக்கும். ஆனால் இரண்டுமே ஒரே பல்கலைக் கழகத்திடம் இணைப்புச் சான்றிதழ் Affiliated Colleges பெற்றிருக்கும். ஆனால் முதலாவதில் கல்வி பயின்ற மாணவர் சர்வதேச அளவில் சவால்களை எதிர்நோக்கும் வல்லமை பெற்றிருப்பார். மற்றயவர் பெயளரவில் பட்டத்தினைப் பெற்[illegible]பார். இந்தத் தர வேறுபாட்டிற்கான கார[illegible]களாக விரிவுரையாளர் பற்றாக்குறை, ஆயவு கூட வசதிகள் பற்றாக்குறை, அடிப்படைக் கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அதற்காக ஏறத்தாழ ஒரே குறிக்கோள் உடைய இலங்கையில் உள்ள சில ஆலோசகர்களைப் பயன்படுத்திச் சந்தை வாய்ப்பைப் பெருக்கிப் பணம் பெறப் பார்க்கிறார்கள். இதை அறியாத சமூகத்தில் உள்ள பெரிய உத்தியோகத்தர்களின பிள்ளைகள் கூட ஏமாற்றப்பட்டு தரமற்ற ஒரு கல்வியைப் பயிலவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள் என்னும் போது சாதாரண ஒரு மாணவனால் தரமான கல்வியை நியாயமான கட்டணத்தில் பெற வாய்ப்புகள் உருவாக்க வேண்டியது அவசியம்.

## அனுமதிக் கட்டணம் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகளை கல்லூரிப் பெயரில் வங்கி ஆணைமூலம் செலுத்துவது நல்லது

மேலும் பிறநாடுகளில் இருந்து வரும் மாணவர்கள் மூலம் அவர்கள் அதிக வருமானமும் அரசாங்கத்திடம் வருமான வரிச் சலுகையும் பெறுகின்றனர்.

(வளரும்...)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | க் | 2 ச | 3 [illegible] | 4 பா | 5 த் | 6 க | ம் |
| க் | | 7 பா | ண் | ட | வ | ர் | |
| 8 ச | 9 ம | | 10 பு | க | ழ் | ச் | 11 சி |
| 12 த | ங் | 13 கா | | ண் | | 14 ச | ரி |
| 15 ந | க | ன | ம் | | 16 பா | ணை | |
| ம் | | க | | 17 ப | ல் | | 18 ச |
| | 19 நி | ம் | 20 ம | தி | | 21 க | கா |
| 22 ப | றை | | 23 நு | ல் | லி | ய | ம் |

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### மேலிருந்து கீழ்

1. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன.
2. சபை.
3. கீர்த்தி.
4. பாடுபவன்.
5. தரையில் கைகளை ஊன்றி, கால் முட்டிகளைபயன்படுத்தி ஊர்ந்து செல்.
6. சிங்கம் எழுப்பும் ஒலி.
9. துலக்கம் குறைய.
11. புன்னகை புரி.
13. வனம்.
16. குழந்தையின் உணவு.
17. விடை.
18. அமெரிக்காவுக்குத் தலையிடி கொடுத்தவர் இவ்விதம் சுருக்கமாக அழைக்கப்பட்டார்.
19. எடை.
20. போதை தரக்கூடியது.
21. கழித்தல் குறியீடு.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 15**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (02.07.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல. 15 இல் வெற்றிபெற்றோர் விவரம் 06.07.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. செய்யக்கூடாத ஐந்து பாவங்கள்.
7. கௌரவரின் சகோதரர்கள்.
8. ஒரேயளவான.
10. பாராட்டுரை.
12. நந்தவனம்.
14. இணக்கச்சொல்.
15. எரிதல்.
16. ஒருவகைப் பாத்திரம்
17. மனிதனுக்கு முப்பத்திரண்டு.
19. வாழ்க்கையில் அனைவரும் வேண்டுவது இதைத்தான்.
21. எந்நேரமும்.
22. ஒரு தோல்வாத்தியம்
23. மிகச் சரியாக.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 13 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**
(1) சமத்துவம். (6) பிற. (7)வர. (8) வான். (9) வடக்கு. (10) சமை. (11) சீர். (12) மனை. (14)பொதி. (16) விநாயகன். (19) கல். (20)வாரம். (21) வில்லை. (22) பாய். (23) புதல்வி.

**மேலிருந்து கீழ்**
(1)சபி. (2)மறவர். (3)துவக்கு. (4)வரகு. (5)நன்மை. (8)வாசனை. (11) சீதேவி. (12)மதி. (13) துயர. (14)பொன். (15) நல்லை. (17)நாவாய். (18) கம்பு. (19) கல்வி. (21) வில்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 13 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — **பாக்கியநாதன் ரசிகாந்தன்**
*அரசடி வீதி, வடலியடைப்பு*
*பண்டத்தரிப்பு.*

**2 ஆம் பரிசு** — **திருமதி. கருணா வரதராசா**
*இல: 20 டச்சு வீதி, சங்கத்தானை*
*சாவகச்சேரி.*

**3 ஆம் பரிசு** — **தருமலிங்கம் சரவணபவன்**
*தேவமாதா கோயில் ஒழுங்கை,*
*தும்பளை, பருத்தித்துறை.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

## பாராட்டுப் பெறுவோர்

**(1) மகேந்திரகுமார் காத்தாயினி**
இளவாலை வடக்கு, இளவாலை.

**(2) சி.சங்கவை**
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

**(4) ஆ.இரவிச்சந்திரன்**
[illegible]வைத்தியசாலை அருகில்,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

**(5) எஸ்.சரன்யன்**
கைதடி நுணாவில், சாவகச்சேரி.

**(5) செல்வி.ஞானசுர்த்தி கஜேந்தினி**
தரம்-7, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Weight Loss

நேர்த்தியான உடல் தோற்றத்திற்கு

Baraka

Slimexol

(ஸ்லிமெக்ஸோல்)

✓ மிகவும் பாதுகாப்பாகவும், விரைந்திறனாகவும் உடல் நிறையைக் குறைக்கும்.
✓ மேலதிக கொழுப்பையும், கொலஸ்ட்ரோலின் அளவையும் கட்டுப்படுத்தும்.
✓ சக்தி மூலமாகத் தொழிற்பட்டு இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

அனுமதி இல: AY/MF/199/Cap/07 உடனடி அழைப்புக்கு: 0773 237859

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம் SIVA NARUMANAB POONGA No:288, Hospital Road, Jaffna. Tel: 021 2222567

Manufactured By: Bio Extracts (Pvt) Ltd.
Marketed By: Expolanka Pharmaceuticals (Pvt) Ltd.

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
23.03.1924

மறைவு
23.05.2008

## அமரர் குணரத்தினம் இலட்சுமிப்பிள்ளை
(செல்லம்மா)

23.05.2008 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'கஜேந்திர பவனம்',
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
தொ.பே: 021 226 4426

தகவல்:
குடும்பத்தினர்.

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 52 வயது, அரசசார்பு நிலையத்தில் பணிபுரிந்த தாரமிழந்தவருக்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் தேவை. விதவைகளும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு: 021 222 9481
(நேரம், பகல், 9.00 - 5.00)

**திருமணசேவை** 'மிகச்சிறந்த சேவை முடிந்தளவு குறைந்தகூலி' இதுவே வேல் அமுதனின் தாரக மந்திரம்! வேல் அமுதனின் இதரவரன்முறைகளைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலைவேளை சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலஅமுதனுடன் தொடர்புகொள்க.
தொலை பேசி: 2360488, 2360614, 4873929

# ஓராண்டு நினைவலைகள்

மலேசியாவில் பிறந்தவரும் கோண்டாவில், லண்டன் ஆகிய இடங்களில் வசித்தவருமான

## அமரர் கந்தப்பு பூதத்தம்பி
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



மண்ணில்
12.02.1928

விண்ணில்
20.06.2007

ஆதவனும் மேற்கினிலே
ஓய்வெடுத்தே வந்துதிப்பான்!
ஆதரவாய் கிழக்கிருந்தே எமை
ஓய்வின்றி காத்திருந்தீர்!
நொடி பிறப்பை செலவுசெய்தான்
கொடுத்த உயிர் பறித்தெடுக்க
கோடிப் பிறப்பினிலே வரவு வைத்தீர்
பதித்த நினைவுகளை பிரித்தெடுக்க
போவதென்ன நாளும் பொழுதுகளே
போய் விடுமோ வாழும் நினைவலைகள்
மேற்கினிலும் ஒரு திசையுண்டு
நாமறிந்து ஆண்டொன்று ஆனதையா!

24, Launcestln Road,
Perivale.
London UB6 7 EU
(0044 208 9988450)

உள்ளத்தால் உணர்வால் உங்களோடு வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

# 31 ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பு



மலர்வு
18.04.1938

உதிர்வு
25.05.2008

## திருமதி பூபதி சிவசுப்பிரமணியம்

*திதி: தேய்பிறை பஞ்சமி (22.06.2008)*

கடந்த 25.05.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் பூபதி சிவசுப்பிரமணியம அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் வில்லூன்றியில் நடைபெறும்.


24.06.2008 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் அவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்பத்தினரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

பிள்ளைகள்,
சகோதரி.

# ஈர விழிகளுடன் நெஞ்சம் உருகும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24 ★ 12 ★ 1924

உதிர்வு
04 ★ 07 ★ 2007

## அமரர் செல்லப்பா இராசரத்தினம்
(ஓய்வு பெற்ற ஊழியர், இ.போ.ச)

திதி: 22.06.2008 (சதுர்த்தி)

எங்கள் இதயக் கோயிலின் இதய தீபம் அணைந்து
இன்றுடன் ஆண்டு ஒன்று ஆனதுவோ?
நேற்றுப் போல் இருக்குதப்பா உங்கள் அன்புத் திருமுகம் நோக்கி!
இன்னும் பலகாலம் எங்களோடு வாழ்ந்திருப்பீர்கள் என எண்ணியிருந்தோம்? அப்பா
எங்களைத் தவிக்க விட்டுவிட்டு எங்குதான் சென்றீர்கள் அப்பா?
உங்களைப் படைத்தவனுக்கே பொறுக்கவில்லையா அப்பா?
உங்களை எங்களிடமிருந்து பிரிக்க! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீரோ?
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது.

இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(75327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான நிகழ்வு

வலி.வடக்கு,ஜூன்22

அமரர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரெட்ணம் அவர்களின் 45ஆம் நாள் நினைவையொட்டி இரத்ததான நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை அளவெட்டியில் அமைந்துள்ள தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (202-86)

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர், திண்ணபுரத்துச் சுந்தரேசுவரப் பெருமான் முன்னிலையில் திருவாசகச் சொற்பொழிவு செய்து சிவத்தமிழ்ச்செல்வி என்னும் பட்டம் பெற்ற

செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரது ஆத்மா துர்க்காதேவியின் பாதார விந்தங்களை அடைய ஆண்டிக்கேணி ஐயனாரையும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆதீனகர்த்தாக்கள்,**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்.**

(75544)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர் இராசையா சிவசுப்பிரமணியம்
(சிக்காய்)

தோற்றம் 24-02-1951 மறைவு 22-05-2008

போற்றி நம்மை வையகத்தில் யாரும் புகழ நன்றாய்
ஆற்றுப்படுத்தி அன்புடனே நல்மொழிகள் பேசி நின்றாய்
கூற்றம் கவர எம்கூர் விழிநீர் சிந்த ஐயா! உந்தன்
தோற்றம் மறைந்து போனதால் நாம் எல்லாம் கலங்கி
நிற்கின்றோம் நாள்கள் 31 ஆகியும் உன்
நினைவு அலைகள் மறையவில்லை.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

அளவெட்டி தெற்கு, அளவெட்டி. **உறவினர்கள்.**

(75625)

## மரண அறிவித்தல்



**ஜோன் ஞானமுத்து**

தேவாலய வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் ஞானமுத்து 20.06.2008 வெள்ளிக்கிழமை இறைவனடி சென்றுவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் ஞானப்பு தம்பதியரின் மகனும் பிலோமினாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சபாவதி - அன்னம் தம்பதியரின் மருமகனும் ஜோசேப், காலஞ்சென்ற திரேசம்மா, விசுவாசம், மாக்கிறேற் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கத்தரின் (கொலண்ட்), ஞானேஸ்வரி, அன்ரன் (சுவிஸ்), மங்களேஸ்வரி, மரீனா, ஜெயக்குமார் (லண்டன்), ஜோகேஸ்வரி (ஜேர்மனி), அனுஷியா (லண்டன்), காலஞ்சென்ற பிலிப்குமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அமரசிங்கம், மனோகரன், பபிஸ்ரா, அன்ரனிராஜ், தர்மகுலசிங்கம், ரூபி சந்திரகுமார், டேவிற் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவஞானம், நவமணி, பிலோமினா, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பெனடிற், அருள்பிரகாசம், சாமுவேல் ஆகியோரின் மைத்துனரும் ராஜரட்ணத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.06.2008) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மல்லாகம் தூய புதுமை மாதா ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் மல்லாகம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மல்லாகம். (75629)

தகவல்: **மனைவி.**

## தவறிவிட்டது

அருளானந்தம் சுயந்தன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் வாகன வரிப்பத்திரம் (NPMF 9906) திருநெல்வேலிக்கும் கந்தர்மடத்திற்குமிடையில் 20.06.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: A.சுயந்தன்
077 6562685, 021 222 2845

(#/553453)

## பணிப்பெண் தேவை

40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

தொடர்பு:
021 222 8627
077 3086894

(#/553454)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.06.2008 (திங்கட்கிழமை) விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **றாஜீவ்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப் புளியடி.
* **P.ரவி** - சாவகச்சேரி.
* **சிற்றி பாம் ரேடர்ஸ்** - கல்வியங்காடு.

(75626)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி லாசறஸ் பிலோமினம்மா



எமது பாடசாலை ஆசிரியர் **திரு.லா.யஷ்ரின் அன்ரனிற்றோ** அவர்களின் அன்புத் தாய் லா.பிலோமினம்மா அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்,**
யா/புனித மரியாள் வித்தியாலயம் (OLR),
4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(75628)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் வீரகத்தியார் சேனாதிராசா**

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி இரஞ்சிதாதேவி மகேஸ்வரநாதன்** அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,**
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.

(75621)

### எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் நிகழ்வு

நவாலி,ஜூன்22

உலக சுற்றாடல் தினத்தையொட்டி ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்தினால் ''ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்'' என்னும் தலைப்பில் மக்கள் மத்தியில் எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்கான கலந்துரையாடலொன்று உப அலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் கடந்த வாரம்


## வாகனங்கள் விற்பனைக்குண்டு

CHINA TIPPER 1½ CUP
NP LE XXXX
MHSUBISHI 350 Canter
47-XXXX

மேலதிக தொடர்புகளுக்கு
முகாமையாளர்,
த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (PLC)
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
Tele No.: 021 222 2310, 021 222 6256

(#/553450)


## திறப்பு விழா அழைப்பு

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது

**கூட்டுறவு நகர்**

Coop City

இடம்: **பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
(வஸ்தியன் சந்திக்கு அருகில்)

காலம்: **2008 ஜூன் 23 திங்கட்கிழமை**

நேரம்: **முற்பகல் 10 மணி**

கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(#/553451)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 05-04-1924 மறைவு 23-05-2008



அமரர் கணபதிப்பிள்ளை பொன்னம்மா

திங்களொன்று சென்றாலும் தேயாது உங்கள் நினைவு
திகட்டாத திருமுகமும் தித்திக்கும் இன் சொல்லும்
தினமும் கேட்கிறது எம் செவியில்- அருளிறையின்
திருவடியில் அமைந்து உங்கள் ஆத்மா சாந்தி பெறுக!

கடந்த 23.05.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் புற்றளைப் பிள்ளையார் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகள் [illegible] 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாயி இல்லம், புற்றளை, புலோலி. (75549) **குடும்பத்தினர்.**


## இறக்குமதி செய்யப்பட்ட புதிய

## "PEAVEY" Speaker Boxes

விற்பனைக்குண்டு



தொடர்பு:-
கோபுரம் சவுண்ட்ஸ்
38, மஞ்சவனப் பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச்சூழல், குடும்பப் பிரச்சினைகளால்.......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

(3) சமூகத் தொழில்வழிச் சிகிச்சையாளர்:- பல்வேறு பட்ட திணைக்களங்களில் கடமையாற்றுகின்றவர்கள் பயன்படுத்துகின்ற அங்கவீன நோயாளிகளுக்கும் ஏற்றவாறு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.

*உ+ம்:-* கட்டடங்களை ஊனமுற்றவர்களும் பயன்படுத்தக் கூடியவாறு கட்டடக்கலைஞருக்கு ஆலோசனைகளை வழங்கல்.

புனருத்தாரணம் செய்யப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்றவாறு வீட்டுச் சூழல் உருவாக்க விடுவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தப்படுத்தல்.

**யாழ்ப்பாணத்தில் தொழில்வழிச் சிகிச்சையின் நிலை**

யாழ்.மக்கள் பலர் இச்சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் போர்ச்சூழலே ஆகும். எனவே இங்கு ஏறத்தாழ 52 தொழில் வழிச்சிகிச்சையாளர் தேவைப்படும் நிலையில் உள்ளபோது ஒருவரே சுகாதார அமைச்சினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்ற ஆளணி இன்மை, உரிய உபகரணம் இல்லாமை காரணமாக அவருடைய செயற்பாடுகள் உரியவழியில் நடைமுறைப்படுத்தப்பட முடியாது உள்ளது. எனவே சிறுவர்களுக்கு மட்டுமே சிகிச்சைகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. கூடுதலாகப் பாதிக்கப்பட்டோரும் சிறுவர்களே ஆவர். உரியவர்கள் இதற்குரிய ஒழுங்குகளைச் செய்தால் பெரியவர்களுக்கும் சிகிச்சையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் .

ஒரு சிகிச்சையாளரால் 842 சிறுவர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். மிகவும் பாதிக்கப்பட்ட 32 குழந்தைகளுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட இருக்கைகள் இவரால் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவிகள் கரிதாஸ் - கியூடெக்நிறுவனம் ஊடாகவழங்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமக்கல்வி வலயம், யாழ். கல்வி வலயம் உட்பட 112 பாடசாலைகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பௌதீகரீதியிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்ட 250 வரையான மாணவர்கள் சிகிச்சை பெறவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கான போக்குவரத்து நிதி உதவிகளை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு வழங்கியது. 2008 இற்கான உதவிகளை 'ஸா' என்னும் அரசசார்பற்ற நிறுவனம் வழங்குகிறது.

2007 ஆம் ஆண்டு 8 பிரதேச செயலகங்கள் ஊடாக 260 வரையான சிறுவர்களும், 2008 ஆம் ஆண்டு (மே வரை) 2 பிரதேச செயலகங்கள் ஊடாக 77 சிறுவர்களும்தொழில் வழிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

**இலங்கையில் தொழில்வழிச் சிகிச்சையாளர்கள்**

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இதற்குரிய கல்வி நடவடிக்கைகள் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் அரசினால் 116 சிகிச்சையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 தமிழர்களே உள்ளனர். இவர்களில் ஒருவரே வட மாகாணத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இவரே யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார். பல தரப்பட்ட இடையூறுகள் மத்தியில் இவரது சுயமுயற்சியால் இச்சிகிச்சை சிறப்பாக முன்னெடுக் கப்பட்டு வருகிறது.

தொழில் வழிச் சிகிச்சையாளர் பிரேமகுமார் கணேசலிங்கத்திடம் இச்சிகிச்சையை மேம்படுத்த யாழ். மாவட்டத்தில் என்ன நடைமுறைப்படுத்த வேண்டும் என வினாவியபோது அவர் பல கருத்துகளை முன் வைத்தார்.

வடமாகாணத்திற்கு 142 வரையான தொழில் சிகிச்சையாளர்கள் தேவைப்படும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் எனவே போதிய எண்ணிக்கையானோர் அரசால் நியமிக்கப்பட வேண்டும்.

இச்சிகிச்சைக்குரிய உபகரணங்கள் விலை கூடியனவாக இருப்பதால் அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் அவற்றை தந்துதவ வேண்டும்.

குறிப்பாகச் சமூக சேவைத் திணைக்களம், கல்வித் திணைக்களம், சிறைச்சாலை என்பன சுகாதாரத் திணைக்களத்தைவிட மேலும் தொழில் வழிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும்போது வாழ்க்கை நிலை உயர்த்தப்படும்.

யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை, மந்திகை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைகளில் மனநலச் சிகிச்சைக்கு உட்படுத்தல் (Counciling) தகுதி வாய்ந்த வர்களால் மேற்கொள்ளப்படல் வேண் டும். மல்லாகம், பருத்தித்துறைப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள "குடில்"கள் அரசால் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டு பூரண பயிற்சி பெற்ற. தகுதி வாய்ந்த தொழில் வழிச் சிகிச்சையாளர்கள் நியமிக் கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் விசேட தேவையுடைய குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கோட்ட மட்டத்தில் தகுதி வாய்ந்த தொழில் வழிச் சிகிச்சையாளர் நியமிக்கப்படல் வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் காத்திரமான பங்களிப்பு இதற்கு மிகவும் அவசியமாகும். தவறான நபர்களின் பங்களிப்பு மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை மேலும் தவறான வழிக்கு இட்டுச் செல்லுமானால் மீளமுடியாப் பாதிப்பிற்குள் யாழ். சமுகம் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க முடியாத துன்பத்திற்குள்ளாகலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

***

## ஔவையாருக்குக் கீரைக்கறி....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூடு குறையாவண்ணம் நன்றாக நெய் விட்டுத்தாழித்து கமகம என்று வாசம் வந்து கொண்டிருந்த, பச்சை நிறமான கீரைக்கறியைச் சோற்றோடு உண்பதற்குக் கொடுத்தார்கள்.

பசியோடு மழைக்குளிரில் நடுநடுங்கி வந்த ஔவையார், சூடான கீரைக் கறியோடு வயிறார, வேண்டிய அளவும் நன்றாக உண்டார்.

அவருக்குக் கீரைக்கறி சாப்பிட்டதாக நினைப்பில்லை. இறவா நிலையை அடையத் தேவர்கள் அருந்திய அமுதத்தைச் சாப்பிட்டது போல்தான் இருந்ததாம். அதனால் கீரைக்கறி என்று பொய் சொல்லி அமுதத்தை இட்டனர் அரிவையர் என்று புகழ்கிறார் ஔவையார். கடகம் என்பது கையிலே அணியும் ஒரு அணிகலன்.

இவை போல, காளமேகப் புலவர் தனக்குக் கிடைத்த விருந்துகள் பற்றியும் அழகாகக் கூறியிருக்கிறார். தண்டைக்கால் அம்மை பூசணிக்காய்க் கறியுடன், காளமேகத்துக்கு ஒரு விருந்து கொடுத்தார்.

கொண்டத்தூரில் வாழ்ந்த தண்டைக்கால் அம்மை சமைத்த பூசணிக்காய்க் கறியைப் பற்றி வெகுவாகப் புகழ்கிறார் காளமேகப்புலவர்.

கீரையைப் புகழ்ந்தாலும் அது தகும். ஏனெனில் கீரை சத்துள்ள உணவு. ஆனால் பூசணிக்காயை அவர் புகழும் விதம் புதுமையாக இருக்கிறது.

அன்போடு கொடுத்ததால் ஔவையாருக்கு கீரையும் அமுதமாக இருந்தது போல, காளமேகப் புலவருக்குப் பூசணிக்காய், மோட்சத்தையே கொடுக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்ததாம்.

**கண்டக்கால் கிட்டும்**
**கைலாயம் கைக்கொண்டுட்**
**கொண்டைக்கால் மோட்சம்**
**கொடுக்குமே.... கொண்டத்தூர்**
**தண்டைக்கால் அம்மை**
**சமைத்து வைத்த பூசணிக்காய்**
**அண்டர்க்காம் ஈசருக்கு**
**மாம்**

பூசணிக்காய்க் கறியைக் கண்டதுமே கைலாயத்தைக் கண்டது போல இருந்ததாம். கையாலள்ளி உண்டதுமே மோட்சம் கிடைத்தது போல இருந்ததாம் காளமேகப் புலவருக்கு.

அந்தப் பூசணிக்காய்க் கறி மனிதர்களுக்கு மட்டுமல்ல தேவர்களுக்கும், ஏன் சிவபெருமானுக்குமே சிறப்பான விருந்தாக இருக்கும் என்று நகைச்சுவையாகப் பாடுகிறார் காளமேகம்.

அடிமனதிலே பதிந்த எதுவும் அழிக்க முடியாதது. ஒருவர் செய்த உதவியும், அடிமனத்திலே ஆழப்பதிந்து விட்டால், பின்னால் அது அகலவே மாட்டாது. தமக்கு உப்பிட்டவர்களின் நினைவுகளைத் தமது அடிமனத்திலே பதியவிட்ட புலவர்கள், அதாவது உள் அளவும் நினைத்த புலவர்கள், அந்தக் காட்சிகளை எமக்கும் உள் அளவும் பதிய வைத்து விடுகிறார்கள். ★★★★★★★

*நன்றி:- இலக்கியத் தேறல்.*




# யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
## நிறுவியவர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

தலைவர் : திருமதி சி.அனந்தசயனன் *(அதிபர்)*
இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 24.06.2008 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி

*பிரதம விருந்தினர்:*
கலாநிதி கனகசபை சிவபாலன் அவர்கள்
M.B.B.S (Peredeniya University) Ph.D (Leeds U.K)
*(பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*
*நினைவுப் பேருரை:*
வைத்தியகலாநிதி கந்தஞானியார் இளங்கோஞானியார் அவர்கள்
M.B.B.S (Jaffna University)
*(போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)*
*சிறப்பு விருந்தினர்:*
சற்குணானந்தம் கைலாசநாதன் அவர்கள்
*(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)*
*பரிசில் வழங்கல்:*
திருமதி அருணேஸ்வரி சிவபாலன் அவர்கள்
*நன்றியுரை:*
திரு.கதிர்காமத்தம்பி அஜந்தன் அவர்கள்
*(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பாடசாலைச் சமூகம்.


## முதலுதவிப் பயிற்சி இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன் 22

மானிட விடியற் கழகத்தின் 'மானிடன்' முதலுதவிப் பயிற்சி இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் கௌரவ விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கமும் கலந்துகொள்வர்.

இந்த இறுவட்டு பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்தின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதலுதவி முறைகளை உள்ளடக்கியதாகும். (அ-1)


# 35ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
04 ★ 10 ★ 1926



இறப்பு
19 ★ 05 ★ 2008

## அமரர் ஆறுமுகம் ஐயாத்துரை

19.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலை நயினாதீவு தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*03ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

*தகவல்:*
(75610) ஐ.லிங்கநாதன் *(கடவுள் - மகன்)*

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் லேன், நல்லூர்.*
(75602)

## தவறிவிட்டது

வீரமாகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா தினத்தன்று பெறுமதிமிக்க கழுத்துச் சங்கிலி அம்பாள் சந்நிதான சூழலில் தவறிவிட்டது. கண்டு எடுத்த அம்பாள் அடியார் தயவுசெய்து கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து அம்பாளின் அருள்கிடைக்க வேண்டுகிறேன். 0776544513 அல்லது அனுஷ்யா - 3360 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ளலாம். (75603)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **விஜயரட்ணம் ரவிந்திரன்**
*றெயில் றோட் (ஆதிரா மருந்தகம்),*
*கொக்குவில் கிழக்கு.*
(75601)

## விற்பனைக்கு

வீடியோ கசற்றுகள், CDக்கள், கசற் ராக்கைகள் வீட்டுத்தளபாடங்கள், பஜாஜ் ஸ்கூட்டர் எஞ்சின் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: **சுஜீவா வீடியோ விசன்**
*தெணியம்மை வீதி,வல்வெட்டித்துறை.*
T.P.:4391 (சி/5534241)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 30, உயரம் 5'8" - 12இல் செவ்வாய், நட்சத்திரம் மகம், தீய பழக்கம் எதுவுமற்ற நல்ல குடும்பப் பின்னணி கொண்ட HIGHLY SKILLED IMMIGRANT VISA வில் UKயில் வசிக்கும் B.Com பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குடும்ப விவரங்களுடன் ஜாதகம், [illegible] கவும்.
Email: [illegible] @ yahoo.Com
Tel: 031 2227842, 060 2641580
(75608)

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும்
துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமாகிய
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
இன்முகமும் இன்சொல்லும் கொண்ட அன்னை
இறைபணித் தொண்டரை பேணி வளர்த்த அன்னை
எப்போதும் நீறு அணிந்து சிரித்து மகிழ்ந்த அன்னை
துர்க்காதேவஸ்தான திருவடி சேர்ந்தாராம்
நேர்வழியில் நின்று முதுமை வரை வாழ்ந்து
நேசமுடன் தொண்டர்க்கு அமுது தந்து மகிழ்ந்து
அகமகிழ் சிந்தையால் உயர்ந்து நின்று
அரனடி சேர்ந்தாராம் தங்கம்மா என்னும் நல்லாள்
இறைவனின் நல்லாசிகள் உரித்தாகட்டும்

**குணம் கிறீம் கவுஸ் உரிமையாளர்,**
**தேவதிரவியம் குடும்பம்,**
**குணம் கிறீம் கவுஸ் ஊழியர்கள்,** *சுன்னாகம்.*
(75510)




இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகங்களில்
MBBS மற்றும் வேறு பட்டப்படிப்புகள் படிப்பதற்கு
இலங்கை மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
2008/2009 பல்கலைக்கழக
அனுமதிக்கான இலவச ஆலோசனைகளையும்
வழிகாட்டல்களையும் வழங்குகின்றோம்.

இலங்கையில் தொடர்பிற்கு ➤ T.P : 0777 797804

இந்தியாவில் தொடர்பிற்கு
Dr. Kandasamy Mohan M. Sc.Ph.D
No. 4, Madakovil Street, Rayapuram,
Chennai - 13.

T.P : 0091 9962000215 - 0091 9962023071
Email : m.vigneshexports@yahoo.com
m.vigneshexports@rediffmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியாவின் சுதாகரிப்பை புலப்படுத்தும் விஜயம் இது

இந்தியாவின் மிக உயர்ந்த மட்டத்திலான அதிகாரிகள் குழு ஒன்று திடீரென- சத்தம் சந்தடியின்றி- கொழும்பு வந்தமை இலங்கை அரசியல் வட்டாரங்களில் ஏன், எதற்கு என்று பல்வேறு கேள்விக் கணைகளை எழுப்பியிருக்கின்றது.

சார்க் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்குபற்றுவது தொடர்பான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதே இந்த உயர் அதிகாரிகள் குழுவின் கொழும்பு வருகையின் நோக்கம் என்று கூறப்பட்டாலும் ஆனால் அதுவல்ல பின்னணி என்பது பரகசியமானவிடயம். அந்தத் தேவைக்காக இவ்வளவு உயர்மட்டத்தில் -இவ்வளவு முற்கூட்டியே- அதிகாரிகள் குழு இங்கு வரத் தேவையில்லை என்பது எவருக்கும் புரியும் ஒன்று.

இந்த உயர்மட்ட இந்தியக் குழுவின் கொழும்பு வருகை பற்றிய தகவலை, அக்குழு கொழும்புக்கு வந்து அவ்விடயம் பரகசியம் ஆகும் வரை, கொழும்பு அரசுத்தரப்பு அமுக்கி வைத்திருந்தது; வெளிப்படுத்வே இல்லை. அது ஒன்றே, இந்தக் குழுவின் விஜயம் கொழும் புத்தரப்பின் விருப்பத்துக்கும், வரவேற்புக்கும் உரிய விவகாரமல்ல என்பதை விளக்கப் போதுமானதாகும்.

புதுடில்லி தொடர்பான கொழும்பின் இராஜதந்திரக் கையாள்கை இந்திய அரசுக்குக் கொடுத்து வந்த எரிச்சலின் உச்சக் கட்ட விளைவே இந்த உயர்மட்டக்குழுவின் விஜயம் எனக் கருதப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கொழும்பு அரசு, இதுவரை காலமும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரம் தொடக்கம் பிராந்திய அரசியல் விடயங்கள் மற்றும் இராஜதந்திரத் தொடர்பாடல் செயற்பாடுகள் வரை புதுடில்லிக்கு அளித்து வந்த வாக்குறுதிகளை நிறைவுசெய்யவே இல்லை என்றும் அது பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான பாரத அரசுக்கு மிகுந்த எரிச்சலைக் கொடுத்து வந்துள்ளது என்பதும் வெளிப்படையாக தெரிந்த அம்சங்களே.

பாகிஸ்தானையும், சீனாவையும் காட்டிக்காட்டியே புதுடில்லியிடம் உதவிபெற்றுவந்த கொழும்பு, மறுபுறத்தில் இந்த இரண்டு நாடுகளுடனும்- குறிப்பாக சீனாவுடன்-மிக அதிக பட்ச நெருக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவைத் தாண்டிய முன்னுரிமையை சீனாவுக்கு வழங்கி வருகின்றது என்ற ஆதங்கம் புதுடில்லிக்கு உண்டு.

தனது தென்கோடியில் சீனா காலூன்றுவதற்கு இலங்கை இடமளிக்கின்றது என்ற யதார்த்தத்தை புதுடில்லி வெறுமனே பார்த்துக்கொண்டு வாளாதிருக்க முடியாது என இப்பத்தியில் ஏற்கனவே சில தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்த விவகாரம் உறைத்து இப்போது 'பொறுத்தது போதும்; பொங்கியெழுவோம்' என்ற கொதிப்பு நிலைக்கு பாரதம் வந்துவிட்டது என்பதையே இந்த உயர்மட்டக் குழுவின் கொழும்பு விஜயம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் ஊடுருவ முடியாத வலுவான பண்பாட்டுப் பாரம்பரிய சுவரையும் மொழிக் கவசத்தையும் கொண்டிருக்கும் சீனா இந்தப் பிராந்தியத்தின் மிகப்பெரிய வல்லரசாக - ஏகாதிபத்திய சக்தியாக - உருவெடுத்து வருகின்றது என்பதையும்-

அந்த வல்லாதிக்க சக்தியின் வருகைக்கு தனது தேசத்தை அகலத்திறந்துவிட்டு இருகரம் கூப்பி வரவேற்பதன் மூலம் இந்தப் பிராந்தியத்தின் அமைதி, சமரச நிலை என்பவற்றுக்கு கொழும்பு ஆப்பு வைக்கின்றது என்பதையும்-

இதில் இந்தியா தலையிட்டு நிலைமையை சீர் செய்யாவிட்டால் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கும், தனித்துவமும், மரியாதையும், கௌரவமும் கேள்விக்குள்ளாகும் என்பதையும் இந்தப் பத்தியில் ஏற்கனவே தெளிவாகவும் திடமாகவும் சுட்டி வந்துள்ளோம்

இவ் விவகாரத்தை நேரத்துடன் இந்தியா புரிந்து கொண்டுவிட்டது. அந்தப் பின்னடைவு நிலையில் இருந்து தன்னை சுதாகரித்துக் கொண்டு, தனது செல்வாக்கையும், அதிகாரத்தையும் இந்தப் பிராந்தியத்தில் நிலை நாட்ட அது தயாராகிவிட்டது என்பதையே அதன்தற் போதைய செயற்பாடு தெளிவாகவும், திடமாகவும் வெளிப்படுத்துகின்றது.

நுரைச்சோலையில் அனல் மின்நிலையம், கொழும்பில் கலாசார மண்டபம், கட்டுநாயக்காவுக்கு அதிவேக பாதை, அம்பாந்தோட்டையில் பாரிய துறைமுகம் என்று இலங்கை விடயத்துக்குள் சீனாவின் கால் அதிகம் ஊன்றப்பட்டுவிட்டது.

போதாக்குறைக்கு 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தகாலம் முதல் இலங்கையில் தங்கியுள்ள சீனப் பிரசைகளுக்கு இலங்கையில் நிரந்தர குடியுரிமை வழங்குவதற்கான விசேட சட்டமூலம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் மஹிந்த அரசினால் சமர்பிக்கப்பட்டிருக்கின்றது.

இவையெல்லாம் சீனவலையில் இலங்கைத் தீவு விழுந்து விட்டமைக்கான கட்டியங்கள் ஆகும்.

இந்த வலையில் இருந்து இலங்கையை விடுவிப்பது, அது இயலாவிடின் இலங்கையை சீனாவின் அணியாக அடையாளம் கண்டு புறமொதுக்கி வைப்பது என்ற ஒரே பிரதான நோக்கமே இந்த உயர்குழுவின் வருகை என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

தனது சர்வதேச இராஜதந்திரக் கையாள்கைச் சிறப்புக்கான விளைவுகளை இப்போது தான் எதிர்கொள்ளத் தொடங்குகின்றது மஹிந்த அரசு.

இது ஆரம்பம்தான். இன்னும் எவ்வளவோ மிச்சம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் 'ராஜபக்ஷ அன்ட் பிரதர்ஸ்' கம்பனி எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் நீதிஅமைச்சிடம் இருந்து பெறப்பட்ட கணனிகள் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டன அந்த வகையில் மேல் நீதிமன்ற நீதிபதி பொ.சுவர்ணராஜா, பருத்தித்துறை நீதிமன்றத்துக்குரிய கணனியை மாவட்ட நீதிபதி க.அரியநாயகத்திடம் கையளிப்பதை படத்தில் காணலாம். சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்துக்கும் கணினி வழங்கப்பட்டது.

## உலக வங்கித் திட்ட மீளாய்வுக் கூட்டம் திருமலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 22

உலக வங்கியின் உதவியுடன் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்த மீளாய்வுக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் வடக்கு மாகாண கல்வியமைச்சில் இடம்பெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

உலக வங்கியினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கையுடன் வருமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

மறுநாளும் வலயப் பணிப்பாளர்களுக்கு மாகாணசபையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. கல்வி அபிவிருத்தி தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்பட விருக்கின்றது. (1)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு பெற்று கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஜூன் மாத கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான சம்பளம் பட்டியலில் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் கையொப்பமிடுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

### சாவகச்சேரி வைத்தியசாலையில் இருநாள் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 22

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் யாழ்.சுகாதார திணைக்களத்தின் நடமாடும் ஆய்வுகூட வாகன சேவை இரு தினங்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களின் நலன்கருதி பிரதி திங்கட்கிழமையும் சனிக்கிழமையும் நடமாடும் ஆய்வு கூட சேவை நடத்தப்படவுள்ளது. கடந்த ஒரு வருடகாலமாக பிரதி சனிக்கிழமைகளில் மட்டும் நடமாடும் ஆய்வுகூட சேவை இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு,ஜூன் 22

யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக்கழகம் அமரர் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத் தும் 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டம் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

* * *

யாழ்ப்பாணம் ஜுன் 22

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை முதன்மை நிலை ஒன்றின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.45 மணிக்கு பாடசாலையின் உள்ளக மைதானதில் நடைபெறவுள்ளது.

அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆசிரிய நிலைய முகாமையாளர் ஞா. இரத்தின சிங்கம் கலந்து கொள்வார். (202)

* * *

மந்திகை ஜுன்- 22

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.00 மணிக்கு இடம்பெறும் கால் இறுதிப் போட்டியில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் கலை மகள் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. பி.ப 3 மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புலோலி குரும்பை கட்டி உதய சூரியன் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (1-218)

* * *

வலிவடக்கு ஜுன்- 22

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு நினைவாக அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்டலீக்கின் அனுசரணையுடன் நடாத்தும் 7 பேர் பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

* இளவாலை யங்கென்றிஸ்வி.க.2பி' அணி எதிர் அராலி துணைவி சென்ஸ்ரார்வி.க. 'பி' அணி

* ஏழாலை ஞானமுருகன் வி.க 'ஏ' அணி எதிர் ஆனைக்கோட்டைஆதவன் வி.க ஏ அணி. (203-86)

* * *

வலிவடக்கு ஜுன்- 22

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மறுமலர்ச்சி கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

* சுதுமலை ஐங்கரன் வி.க எதிர் மானிப்பாய் பெஸ்ரோம் வி.க

* சுதுமலை நாவலர் வி.க எதிர் சுன்னாகம் கலைவாணி வி.க (203-86)

## இலங்கை வங்கியின் தம்பசெட்டி கிராம அறிமுக விழாவும் விளையாட்டுப் போட்டியும்

யாழ்பாணம், ஜூன் 22

இலங்கை வங்கியின் தம்பசெட்டி கிராம அறிமுக விழாவும் விளையாட்டுப் போட்டியும் நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு தம்பசெட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

நிலையக் காப்பாளர் க.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் க.ப. ஆனந்த நடேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம்,

புலோலி-மேற்கு கிராம உத்தியோகத்தர் சீ.லம்போதரன், புலோலி மத்தி கிராம உத்தியோகத்தர் அ.உமா சங்கர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சி.க.கூ.ச.தலைவர் செ. விக்னேஸ்வரன், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய தலைவர் கி.குகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (202)

## சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஜி.சி.ஈ சாதாரணதர பழைய பாடத்திட்டத்தில்தோற்றும் பாடசாலை மாணவருக்கான பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் வலயங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன.

பாடசாலைகளை உரிய வலயங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நாளை

| | |
|---|---|
| ஆனி 09 | 23.06.2008 திங்கட்கிழமை |
| திதி: | பஞ்சமி பி.இ. 03.56 வரை |
| நட்சத்திரம் : | அவிட்டம் மு.இ. 12.13வரை |
| சுபநேரம் : | 11.55 - 01.25 |
| ராகுகாலம் : | 07.25 - 08.55 |

## ஒல்லாந்தர் காலத்தில் நீதி பரிபாலன அதிகாரியாக விளங்கிய பிலிப்பு சிற்றம்பலம்

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

**26 ஜூன் 1758**

1758 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த டொன் பிலிப்பு சிற்றம்பல முதலியார் ஒல்லாந்தரின் யாழ் மாவட்ட நீதிபரிபாலன அதிகாரியாக நியமிக்கப்பட்டார். (நீதிபதி பதவிக்குச் சமமான பதவி) இவரைப் போல் பன்னிரண்டு முதலியார்கள் ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர் போகுமிடமெல்லாம் தலைப்பாகை அணிந்து செல்வதற்கு ஒல்லாந்து அரசு அனுமதி வழங்கியிருந்தது. அத்துடன் ஒல்லாந்த அரச இலச்சினை பொறிக்கப்பட்ட பல்லக்கு, குடை, பல்லக்குத்தூக்குபவர்கள், குடை பிடிப்பவர்கள் என்பவற்றையும் ஒல்லாந்த அரசு இவருக்கு அன்பளிப்புச் செய்திருந்தது.

ஒல்லாந்தருக்கும் உள்ளூர் வாசிகளுக்குமிடையே தரகர் போன்று இவர் செயற்பட் டார். ஒல்லாந்த நலன்களைப் பேணுவதும் ஒல்லாந்த அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதும் இவரது கடமைகள்.

யானை வியாபாரிகளிடம் தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் பாவித்து யானை வர்த்தகத்தை ஒல்லாந்த அரசுக்கு வருமானம் ஈட்டித்தரும் தொழிலாக மாற்றுவது இவருக்கு வழங்கப்பட்டிருந்த கடமைகளுள் முதன்மையானது.

**செல்லுமிட மெங்கும் தலைப்பாகை அணிய அதிகாரம் பெற்றிருந்தார்**

இலங்கையின்தேசியச்சொத்தான யானைகள் அழிக்கப்பட்டு வருவதும் இலங்கையில் யானைகளின் எண் ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதும் கவலைக்குரிய விடயம். இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம் யானைகளையும் பாதித்துள்ளதாக பி.பி.சி தெரிவித்துள்ளது. தென்னிலங்கையில் யானைகளின் சரணாலயங்கள் பல உள்ளன. இதே போல் வடபகுதியிலும் யானைகள் சரணாலயம் ஒன்று உருவாக்கப்பட்டு யானைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வமத இன்னிசை நிகழ்வு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. பக்திகீதக் குழுக்கள் இரண்டு இன்னிசை வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும்-
அங்கு வருகை தந்த மதகுருமார்களையும் மண்டபத்தில் நிரம்பியிருந்த சர்வமத பக்தர்களையும் அடுத்துள்ள படங்களிலும்- காணலாம்.
வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் தலைவரும், யாழ்.மாவட்ட நீதிபதியுமான இ.வசந்தசேனன் வரவேற்புரை நிகழ்த்துவதைக் கடைசிப்

## பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வமத இன்னிசை நிகழ்வு நேற்றுப் பிற்பகல் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் காயத்திரி பீட அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்திரநாயகம், இலங்கை திருச்சபையின் குருமுதல்வர் பி.நேசகுமார், தென்னிந்திய திருச்சபையின் ஆயரின் செயலாளர் ராஜ் போதகர், பௌத்த மதப் பிரதிநிதியாக டாக்டர் இந்திகா பஸநாயக்க ஆகியோர் ஒரே நேரத்தில் தனித்தனியாக பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சர்வமதப் பாடல்கள் சத்திய சாயி சேவா நிலைய இசைக்குழுவினரால் இசைக்கப்பட்டன.

அங்கு கூடியிருந்த மக்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். குடாநாட்டில் பல பகுதிகளிலும் இருந்து சாயி பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-111)

## சோனியா கலைஞருக்கு இரகசியக் கடிதம்!

சென்னை, ஜூன் 22

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தால் இந்திய அரசுக்கு நெருக்கடி தோன்றியுள்ள நிலையில், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு இரகசியக் கடிதம் ஒன்றை அவசரமாக அனுப்பி வைத்துள்ளார்என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள இடதுசாரி கட்சிகள் மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெறப்போவதாகவும் எச்சரித்துள்ளன.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பில் இந்த வாரம் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில் மத்திய அரசு கவிழ்ந்து விடாது தடுப்பதற்காக தமிழக முதல்வருக்கு சோனியா காந்தி அவசர கடித்ததை முன்னேற்பாடாக எழுதியுள்ளார் என்று தமிழகத்தில் அரசியல் வட்டாரங்களில் பேசப்டுகின்றது. (அ-2)

## கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் பின்னடிப்பு

திருகோணமலை, ஜூன்22

கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் பின்னடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கப்போவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள பின்னணியிலேயே -

திட்டங்களுக்கு உதவ அந்த நிறுவனங்கள் பின் நிற்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதே வேளை -

மாகாண சபையின் அன்றாட பணிகளை முன்னெடுக்க மட்டுமே அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதாவது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அரச சார்பற்ற நிறுவனங்களையே நாடவேண்டிய நிலை மாகாண சபை நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 18 ஆயிரம் வீடுகளை புனரமைப்பதற்கு நிதி தேவையாக உள்ளதாகவும்- இந்த நிதியை தொண்டு நிறுவனங்களிடம் இருந்து பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் - மாகாணசபை அதிகாரிஒருவர் தெரிவித்தார். (அ-1)

## 150 கி.மீற்றருக்கு தொடர்ந்து நடனம் சமாதானத்தை வலியுறுத்தி

கொழும்பு, ஜூன் 22

சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பில் இருந்து ஹற்றன் வரை நடனமாடிக் கொண்டு செல்லும் முயற்சியில் மலையக இளைஞர் ஒருவர் இறங்கியுள்ளார்.ஹற்றனைச் சேர்ந்த டி.எம்.ஹிஸாம் என்ற இளைஞரே கொழும்பிலிருந்து ஹற்றன் வரையான 150 கிலோ மீற்றர் தூரத்தை நடனமாடிக் கடக்கவுள்ளார்.

இந்தச் சாதனைப் பயணத்தை அந்த இளைஞர் எதிர்வரும் முதலாம் திகதிஆரம்பிக்கவுள்ளார்.இந்த இளைஞர் தொடர்ச்சியாக 57 மணித்தியாலங்கள் நடனமாடி ஏற்கனவே உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தண்ணீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிப்புப் பிரிவிலும் உள்ள மானிகள் மற்றும் செயற்கை சுவாசக் கருவிகளை மின்சாரம் இன்றி இயக்குவது எங்ஙனம்?"

எமது மகஜரில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் இருக்குமானால் கிளிநொச்சியில் இருந்தும் பிரயோசனம் இல்லாத எங்களை வேறு இடத்துக்கு தற்காலிக இடமாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிகள் கேட்டுள்ளனர். (அ-2)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இந்த உயர்மட்டக் குழு கூறியதாகவும் அறியப்படுகிறது.

இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் விஜய் சிங் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு நேற்றுமுன்தினம் மின்னாமல் முழங்காமல் திடுதிப்பென கொழும்பு வந்தது.

இந்தக் குழு வெள்ளிக்கிழமை இரவு இ.தொ.கா. தலைவர் எஸ்.தொண்டமானை சந்தித்துக் கலந்துரையாடியது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு இராணுவ வழியில் சாத்தியமேயில்லை. இலங்கையின் ஆள்புல ஒற்றுமைப்பாடு, ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்குள் பேச்சு மூலமான அரசியல் தீர்வே சாத்தியமானது. இதுவே இந்தியாவின் நிலைப்பாடாகும் என்று குழுவினர் ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தனர் என்று சொல்லப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை லேசான விடயம் அல்ல. அதன் மூலம் தீர்வைக் காணமுடியாது. வெற்றிகரமாகவும் அமையாது. நாட்டின் பொருளாதார நிலைதான் மோசமடையுமே தவிர தீர்வைக் கொண்டுவராது என்று குழுவினர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியதாகவும் நம்பிக்கையாக அறியவந்தது.

கிழக்கில் தேர்தல் நடத்தி நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளீர்கள். இந்த நிர்வாகம் மூலம் ஜனநாயகமும், பொருளாதார அபிவிருத்தியும் சீராக முன்னெடுக்கப்பட்டால், அதை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் சூழலே உருவாகும் என்றும் குழுவினர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினராம்.

13ஆவது அரசமைப்புத் திருத்தில் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் கிழக்குக்கு கூடுதல் அதிகாரம் வழங்கி னால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்க வழிபிறக்கும் என்றும் அவர்கள் எடுத்துக் கூறினராம்.

தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ ஆகியோரையும் இந்திய உயர் மட்டக் குழுவினர் சந்தித்தனர்.

முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்த பின்னர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு குழுவினர் இந்தியா திரும்பினர். (அ-01)

## ஆறு கிலோகிராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்ட ரயில் பாலத்துக்கு அடியில் இருந்து 800கிராம் நிறையுடைய சி-4 ரக வெடிபொருள்களை நேற்றுமாலை பொலிஸார் மீட்டுள்ளனர். (அ-02)

## மருத்துவ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என இந்த மாணவர்கள் கேட்கப்பட்டு ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ.மாணவர்கள் ஒரு வருடம் பின் தள்ளிய நிலையில், இந்த வருடம் டிசெம்பர் மாதம் பரீட்சை எடுக்க வேண்டியுள்ள நிலையில், பயிற்சி விரிவுரைகள் இடைநிறுத்தத்தால் அந்த பரீட்சையையும் தவற விட்டு மேலும் ஒரு வருடம் வீணாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர்கள் மேலும் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-1-50)

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதனை மறுத்துள்ள இலங்கை கடற்படைப் பேச்சாளர் கொமடோர் டி.கே. பி.திஸநாயக்க இது புலிகளின் வேலை என்று குற்றஞ்சாட்டி உள்ளார்.

இதேவேளை

இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 28 இலங்கை மீனவர்களை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்திய கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். (அ-1)

## தமிழர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

இந்திய உயர்மட்டக் குழுவிடம் அவர் எடுத்துரைத்த விடயங்கள்

இயற்கையாகவே இந்தியாவுடன் நெருங்கிய உறவுகொண்டுள்ள தமிழமக்கள், இன்று பெரும் இன்னல்களையும் துன்பங்களையும் சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

விமானத்தாக்குதல்கள், இராணுவ நடவடிக்கைகள் என்று ஒருபுறமும், ஆள் கடத்தல், கொலைகள், கைதுகள் என மறுபுறமும் தமிழர்கள் சொல்லொணா அட்டூழியங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

அவர்களுக்காக குரல் கொடுக்க இந்தியா முன்வரவில்லை. இதனால் எமது மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்று இருமாகாணங்களின் இணைப்புக்கும் முன்னர் இந்தியாவே உதவியது. இப்போது இருமாகாணங்களும் பிரிக்கப்பட்ட பின்னர் அதனைக் கண்டும் காணாதது போன்று இந்தியா அது விடயத்தில் மௌனம் சாதிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் கண்டும் காணாத போக்கை இந்தியா கடைப்பிடிப்பது தமிழர்களுக்கு வேதனையும், கவலையும் அளிக்கும் விடயமாகும் - என்றார்.

தமிழர்களின் ஆதங்கங்களை தாம் புரிந்து கொள்வதாகப் பதில் அளித்த உயர்மட்டக் குழு அவரை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்து அங்கு விரிவாக பேசலாம் என்று தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. (அ-1)

## சீனாவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதும், மின் உற்பத்திப் பணி ஆரம்பமாகும்.

பெரும்பாலும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் புதிய மின் பிறப்பாக்கிகள் மூலம் பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சாரசபை வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன.

இப்போது மின் விநியோகம் வழங்கி வரும்'அக்கிறோ' நிறுவனத்தின் சேவைக் காலம் டிசெம்பர் வரை நீடிக்கப்பட்டுள்ளதால், புதிய மின்நிலையத்தின் உற்பத்தி யுடன் செப்ரெம்பர் மாதத்தில் மின்தடை நீக்கப்படலாம் எனவும் மின்சாரசபை வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (அ-01)


உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
FedEx Express
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
WESTERN UNION
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750 ரூபா வீதமும், கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850 ரூபா வரையான விசேட சலுகை.
குறிப்பு:- நீங்கள் அனுப்பப்படும் பொதிகளிற்கு காப்புறுதி உண்டு.



**ஒத்துமாறல்**
வடமராட்சி செ. அலகந்தில் கிராம அபிவிருத்தி நிலைக்களத்தில் ... யாழ்.மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்புகளுக்கு: 0777259105/ 0602245424

**விற்பனைக்கு**
மிகவும் நல்ல நிலையில் உள்ள SHARP -SF - 1118 போட்டோ பிரதி இயந்திரம் விற்பனைக்குண்டு.
222, K.K.S. ROAD (ஆல்சிலோன் அருகில்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.